# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

4-9-66

விலை 20 காசு



# கேள்வி -- பதில்!

**1. வெள்ளைக்காரன் காலத்திலே இத்தனைப் பள்ளிக்கூடம் உண்டா என்று ஒரு காங்கிரஸ்காரர் கேட்கிறார், என்ன பதில்?**

பதிலா? கேள்வி வடிவத்திலேயே தருகிறேன். வெள்ளைக்காரன் காலத்தில் இவ்வளவு வரிகள் உண்டா? வெள்ளைக்காரன் காலத்திலே வாங்கியதைப் போலப் பத்துமடங்கு, இருபது மடங்கு என்ற முறையில் வரி வாங்குவதை மறைத்துவிட்டு, வெள்ளைக்காரன் காலத்திலே இவ்வளவு பள்ளிக்கூடம் உண்டா என்று கேட்பது, ஒழுங்கான நியாயமான கேள்வியா? வெள்ளைக்காரன்கூட அப்போது கேட்டான் எங்கள் காலத்துக்கு முன்பு நீங்கள் ரயிலைப் பார்த்தது உண்டா என்று—அதனால் அவன் செய்த அக்ரமத்தை சகித்துக் கொள்ளவேண்டும் என்று தலைவர்கள் கருதினார்கள்?

**2. ஒட்டகப் பாலைச் சாப்பிடுங்கள் என்று காங்கிரஸ் தலைவர்கள் சொல்லுகிறார்களே, இது என்ன அக்ரமம்?**

இதற்கேவா, அக்ரமம் என்று கூறி வருத்தப்படுகிறீர். முன்பே, காங்கிரஸ் தலைவர்கள், கழுதைப் பாலைச் சாப்பிடுங்கள் என்று புத்திமதி சொல்லியிருக்கிறார்களே, கவனமில்லையா!!

**3. கழகத்திலிருந்து பிரிந்து காங்கிரசுக்குச் சென்றுவிட்ட ஒருவர் கழகத்திலுள்ள மற்றவர்களையும் காங்கிரசுக்கு வந்துவிடும்படி அழைக்கிறாரே, ஏன்?**

தனியே இருக்கப் பயமாக இருக்கும்; துணை தேடுகிறார்!

**4. அமெரிக்காவில் அடுத்த குடிஅரசுத் தலைவராவதற்கு யாருக்கு வாய்ப்பு இருக்கிறது?**

மறைந்த கென்னடியின் தம்பி, ராபர்ட் கென்னடிக்குத்தான், ஜான்சனை விட அதிக வாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள்.

**5. வழக்குமன்றத்தில் நீதிபதி ஒரு குற்றவாளியைப் பார்த்து நீ குற்றவாளியா இல்லையா என்று கேட்டபோது குற்றவாளி சிரித்தான். ஏன்?**

குற்றவாளியா இல்லையா என்று கண்டுபிடிக்கத்தானே பெரிய சம்பளம் வாங்குகிறார் நீதிபதி, அவர் செய்யவேண்டிய வேலையை நம்மைச் செய்யச் சொல்லுகிறாரே என்று எண்ணிச் சிரித்திருப்பான்.

**6. குடை — விசிறி — இந்த இரண்டில் எது அதிர்ஷ்டப் பிறவி?**

ஏதேது மனிதர்கள் மட்டுமல்ல, பொருள்களுக்குக்கூட ஜாதகம் பார்க்கச் சொல்லுவீர் போல இருக்கிறது! சரி. உம்முடைய ஆசையைக் கெடுப்பானேன்—குடை — விசிறி இரண்டில் விசிறிதான் அதிர்ஷ்டப் பிறவி. வீட்டோடு இருக்கிறது. குடை, பாவம், வெயிலிலே வேகிறதல்லவா!

**7. இந்தியாவில் சர்வாதிகாரத்தை ஏற்படுத்திவிட்டால் என்ன ஆகும?**

நாடு, சிறைக்கூடமாகும். சர்வாதிகாரி ராணுவத்தின் கைதி ஆகிவிடுவார், பேச்சு, எழுத்து கிளர்ச்சி என்பவை மூலம் பணியாற்றும் எதிர்க் கட்சிகளுக்குப் பதிலாக, சதித் திட்டம், இரகசியத் தாக்குதல், சுட்டுத் தள்ளுவது போன்ற முறைகள் கொண்ட அரசியல் உருவாகிவிடும். சர்வாதிகாரத்தை ஏற்படுத்திக் கொள்வது, கைவிரல் மோதிரத்தைக் காப்பாற்றிக் கொள்ள, பாம்புப் புற்றுக்குள் கையை ஒளித்து வைத்துக்கொள்வதுபோன்றதாகும். சர்வாதிகாரம் சர்வாதிகாரியையே சாகடித்துவிடக்கூடிய சர்ப்பம்.


## "காஞ்சி"

## இரண்டாம் ஆண்டு மலரில்

அண்ணா அணி செய்யும்

தம்பிக்கு (மடல்)

இரும்பு முள்வேலி, வண்டிக்காரன் மகன்,

மற்றும் இரு கதை, கட்டுரைகளுடன்

தலைவர்கள் தரும்

குடவோலை கண்ட குடியாட்சி, தமிழ் மாட்சி, மாண்டவர் மீண்ட வழக்கு, மண முறிவு, மலர்க்கண்கள், முதலானவைகளுடன் செய்தித் தலைப்புகள், ஆள் மாருட்டம், கந்தல்

முதலிய கதை, கட்டுரை; கவிதை, நாடகம் ஆகியவையும் அலங்கரிக்கின்றன!

11—9—66ல் வெளிவருகிறது. ★ விலை ரூ. 1—00தான்!

### அறிவுடைமை!

சொல்லப்படும் கருத்துக்கள் எத்தன்மை வாய்ந்தவையாயினும், அவற்றின் உட்பொருளை, உண்மையான பொருளை, உணர்ந்து ஒழுகுவதே அறிவுடைமையாகும்.

—திருவள்ளுவர்


# காஞ்சி

மலர் 3 4—9—66 இதழ் 6


# கணித்தறியும் காலம்!

**நாட்டு மக்கள் அறிவுத் தெளிவு பெற்று வருகிறார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழகம் நம்புகிறது; ஆனால் அறியாமையில் கிடக்கிறார்கள் — அதனால் காங்கிரஸ் வெற்றி பெற்றுவிடும் என்று காமராசர் கருதுகிறார்.**

**மக்கள் அறிவுடையவர்களாக இருக்கிறார்களா? இல்லையா என்பதைக் கணித்தறியும் காலம்தான் 1967.**

— என்ற கருத்து, கடந்த கிழமை நடைபெற்று முடிந்த தென்னாற்காடு மாவட்ட மாநாட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரசுக்காரர்கள் அரசுக்கட்டிலேறி அமர்ந்த கடந்த 19 ஆண்டுக் காலமாக, இந்த நாட்டின் நல்வாழ்வுக்கென்று உகுத்த கருத்துரைகள் பலப்பல. உருவாக்கிய திட்டங்களும் அப்படியே.

கடந்த காலத்தின் அனுபவங்களைக் கொண்டு, காங்கிரசுக் கட்சியின் சாதனைகளையும், மக்களுக்கென்று ஆற்றிய பல்வேறுபட்ட உரைகளையும், அளித்த வாக்குறுதிகளையும் நினைவுக்குக் கொண்டு வந்து பார்க்கும்போது—

**நாட்டு மக்கள் ஏமாளிகள் — அறியாமை மிக்கவர்கள்**

என்ற ஆழமான எண்ணத்தின் அடிப்படையில்தான், இயங்கி வந்திருக்கிறார்கள் என்பது தெற்றெனப் புரியும்.

சான்றுக்குச் சில காட்டவேண்டுமானால், மொழி விவகாரத்தில் தமிழகமே கொதித்தெழுந்து நின்று போராட்ட ஆயத்தங்களுக்கு எல்லா எதிர்க்கட்சிகளுமே தயார்படுத்திக்கொண்டிருந்த வேளையில், இந்தி பேசப்படாத இந்தியாவின் பல மாநிலங்களிலும் இந்தி எதிர்ப்புணர்ச்சி பலப்பட்டு வந்த சமயம், தூங்கிய நிலையிலிருந்த நேரு, விழித்தெழுந்து, இந்தியப் பத்திரிகைகள் அனைத்திலும், தன் புகைப்படத்தையும், இந்தியப் பிரதமர் என்ற முத்திரையையும் பொறித்து இந்தி பேசாத மாநிலங்களின்—மக்களின் கருத்தறிந்து, பெரும்பான்மை நிலையை செயல்படுத்தப்போவதாக உத்திரவாதம் அளித்தார்.

எந்த எண்ணத்தின் மீது இந்த உத்திரவாதமளிக்கப்பட்டது? இந்த மொழி விவகாரத்தில் இன்றைய நிலை என்ன? உத்திரவாத உறுதிமொழி பிரசுரிக்கப்பட்டு, சுமார் நான்காண்டுக் காலமாக, இன்னமும் இது மக்களவையில் என்னென்ன பாடுபட்டுக்கொண்டிருக்கிறது!

இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில், தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம், இருமொழிக் கொள்கை, சட்ட வடிவம் பெறவேண்டும்; அதற்காகப் பாடுபடுவேன் என்று நாப்பறை தட்டினார். அது என்ன ஆயிற்று? எந்த கருத்தில் அப்படிப் பேசப்பட்டது?

மக்கள் அறியாமையில் கிடக்கிறார்கள்; அவர்களிடம் எதையும் பேசலாம் என்ற எண்ணத் தடிப்பு தவிர. மக்களை ஏமாற்றக்கூடாது என்பதற்கான செயல் திட்டம் ஏதும் இல்லை.

கடந்த ஆண்டு தமிழகம், தன் தாய்த் தமிழைக் காத்துக்கொள்ள மாநிலம் பரவலாக, செங்குருதிச் சிந்தி; பங்கிறப்பட்ட மண்ணை, செம்மண்ணாக்கியதுமல்லாமல், பல்லுயிரையும் பலி கொண்டிருக்கிறது.

அப்போது அளிக்கப்பட்ட உத்திரவாதமென்ன? முன்னாள் ஒலி பரப்புத் துறை அமைச்சரும் இந்நாள் பிரதமருமான இந்திரா அம்மையார், சென்னைக்கு ஓடிவந்து என்ன கூறினார்?

> "மொழி விவகாரத்தில் அவசர முடிவு எதுவும் எடுத்துவிடக் கூடாது; மறு பரிசீலனை தேவை"

என்றார்.

எந்த கருத்தை இதயத்தை ஏந்தி இப்படிக் கூறினார்? மறு பரிசீலனைக் கென்று, டில்லி சென்று அவர் எடுத்த நடவடிக்கைகள் என்ன? சாதாரண அமைச்சரின் கருத்தை, அப்போதைய பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லையென வாதத்திற்கென ஒப்புக்கொண்டால், பிரதமராகிவிட்ட பின்பு-இந்த இடைவெளியில், அவரது தலைமையில், மக்களவையில் உறுதிமொழிக்குச் சட்ட உத்திரவாதம் தேவை; ஆட்சி மொழிச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று எத்தனை எத்தனை முறை, எத்தனை எத்தனைத் தொடர்க் கூட்டங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது?

எந்த எண்ணத்தில் இந்த விவகாரம் இன்னமும் தள்ளிப் போடப்பட்டுக்கொண்டு வருகிறது?

**மக்கள் அறியாமையில் கிடக்கிறார்கள்; எதையும் பேசலாம்; எதையும் செய்யலாம்!**

என்ற எண்ணம் தவிர, பொருந்தத்தக்க ஆதாரங்கள் ஏதேனும் இந்திய அரசினால் தரமுடியுமா?

இதுதான் போகட்டும். ஐந்து ஆண்டுகட்கு உட்பட்ட விவகாரம். இந்தியத் துணைக் கண்டத்தைச் சோதனைகள் சூழ்ந்துகொண்டதாகக் கூறப்பட்ட இடைவேளை.

1951-ல் தொடங்கப்பட்ட முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டில் அப்போதைய உணவமைச்சர் மட்டுமல்லாமல், பிரதமரும்கூட என்ன சொன்னார்கள்? என்ன பேசினார்கள். திட்ட இறுதியில் 'நாடு உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுவிடும்; உணவு இறக்குமதிகளைக் குறைத்துக் கொள்வோம் என்றல்லவா கூறப்பட்டது? எந்த எண்ணத்தில் இப்படிப் பேசினார்கள்?

(16-ம் பக்கம் பார்க்க)




## 2—15
## பயந்த கிளி!

இளவரசன் கனகசேனனை ஒரு வாரத்திற்கு முன்பு புத்த விகாரத்தில் அஞ்சலை பார்த்திருக்கிறாள். அங்கே முக்கியமானவர்கள் மட்டுமல்லர், சாதாரணமானவர்களும் அவனுக்குத் தரவேண்டிய மரியாதையைத் தரவில்லை. அவன் ஒரு இடத்தில் உட்காராமல், அடிக்கடி இடம் மாறி உட்கார்ந்தான். எல்லோரும் அவனை அலட்சியத்தோடே நடத்தினர். அவனோடு சிரித்துப் பேசி கேலியும் கிண்டலும் செய்தனர்.

மற்றவர்கள் அவனை நடத்திய விதத்திலிருந்து, இவன் அரைப்பைத்தியமாக இருப்பான் போலிருக்கிறதே என்ற சந்தேகம் அஞ்சலைக்கு உண்டாயிற்று. ஆனால் ஒரு பெண்ணைப் பலவந்தமாகத் தூக்கிவரச் செய்து, சிறை வைக்கும் அளவிற்குக் கடினசித்தமோ, காமவெறியோ கொண்டவனாக இருப்பான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை.

அக்கிரமமாகத் தன்னைத் தூக்கிவரச் செய்து, அடைத்து வைத்திருப்பது மல்லாமல், எனக்கா நீ கேடு செய்தாய்? உன்னைக் கொல்லாமல் இன்றுவிடப் போவதில்லை!' என்று கோபத்தோடு வேறு பேசுகிறானே என்று அஞ்சலை அச்சமும் ஆச்சரியமும் அடைந்தாள்.

ஆகவே, அவன் முகத்தைப் பார்த்து, 'நானா தங்களுக்குக் கேடு செய்தேன்?' என்று நடுங்கிக் கொண்டே கேட்டாள்.

'உன் பெயர்தானே அஞ்சலை!' என்று கட்டிலின்மீது ஒரு காலைத் தூக்கிவைத்துக்கொண்டே கனகசேனன் கேட்டான்.

'ஆமாம்!' என்று மெள்ள முணுமுணுத்தாள்.

'நானா தங்களுக்குக் கேடு செய்தேன் என்று நீ கேட்டதும்—நான் பயந்துபோனேன்! எதற்காகப் பயந்துபோனேன் தெரியுமா? தவறி வேறு எந்தப் பெண்ணிடத்திலாகிலும் பேசுகிறோமோ என்று! நீதான் எனக்குக் கேடு செய்தாய்! அதாவது, அஞ்சலையான நீயே தான் எனக்குக் கேடு செய்தாய்!'

"இல்லையே; தங்களுக்கு ஒரு கெடுதியும் நான் செய்யவில்லையே!"

பொய் சொல்லுகிறாய்! அது மட்டுமல்ல; என்னையும் பொய்யன் என்று சொல்லாமல் சொல்லி அவமானப்படுத்துகிறாய்! என்னை அவமதிப்போடு பேசுபவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?" என்று கேட்டபடிச்சிரித்து நகர்ந்து சென்று, கட்டிலின் தலைப்பக்கத்தில் பழங்களோடு இருந்த கத்தியை எடுத்தான்.

கொஞ்சம் அவள் நகர்ந்ததுமே, சட்டென்று அஞ்சலை கட்டிலை விட்டு இறங்கி, சிறிது தள்ளி நின்றாள்.

'அஞ்சலை! எதற்காக இப்படிப் பயப்படுகிறாய்? ஓகோ, கத்தியை எடுத்தேனே—அதைப் பார்த்தா?' என்று அவள் பக்கம் திரும்பிக் கேட்டுவிட்டு, தட்டிலிருந்த ஒரு மாம்பழத்தைக் கையில் எடுத்தான்.

"அஞ்சலை, கொஞ்சம் மாம்பழம் சாப்பிடுகிறாயா? — என்று அவள் அருகே சென்றான்.

"வேண்டாம்!" என்று அவள் பின்னுக்கு நகர்ந்து நின்றாள்.

"யார் அங்கே?" என்று கையைத் தட்டினான்.

திரையை விலக்கிக்கொண்டு, பணிப் பெண் ஒருத்தி உள்ளே வந்தாள்.

"அல்லி! அல்லி! வா!" என்று வளையத்தில் உட்கார்ந்திருந்த கிளி கத்தியது.

"அஞ்சலைக்கு நான் கொடுத்தால் வேண்டாமாம் — நீ கொடு இந்த மாம்பழத்தை!" என்று மாம்பழத்தையும் கத்தியையும் சேர்த்து, அவளிடம் தந்தான்.

பயபக்தியோடு அவற்றை வாங்கிக்கொண்ட அல்லி, அஞ்சலையின் அருகே வந்து நீட்டினாள்.

கனியோடு கத்தியும் இருக்கவே, அஞ்சலை வாங்கிக் கொண்டாள்.

"உம், சாப்பிடு"

"பிறகு சாப்பிடுகிறேன்!"

"முடியாது என் எதிரிலே சாப்பிட்டாக வேண்டும்! ...... ஓகோ, இவள் இருக்கிறாளே என்று வெட்கப்படுகிறாயா? அல்லி, நீ போ!"

அல்லி சென்றுவிட்டதும், 'உம்' ஆகட்டும் என்று கட்டளையிட்டான்.

"இதொரு விதமான பைத்தியம் போலிருக்கிறதே! இதனிடமிருந்து எப்படித் தப்பப் போகிறோம்?" என்று நினைத்து, தலைகுனிந்தபடி மாம்பழத்தையும்கத்தியையும் மாறி மாறிப் பார்த்தாள்.

"ஏன் இப்படி விழிக்கிறாய்— உனக்கு மாங்கனி பிடிக்காதா?"

"ஆமாம்!" என்று தலையை அசைத்தாள்—அத்துடன் அவனது தொல்லை தீர்ந்துவிடும் என்று.

"சரி, பாலாகிலும் கொஞ்சம் குடி!"

"வேண்டாம்!"

"சரி நீயே சொல் — உனக்கு என்னதான் வேண்டும்?"

"நீங்கள் இந்த அறையைவிட்டு வெளியே போகவேண்டும்!" என்று ஆத்திரத்தோடு சொல்லிவிட்டு, முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

"அஞ்சலை! நீ செய்த கெடுதலையும் மறந்துவிட்டு, போனால் போகிறது என்று சிறிதுநேரம் மகிழ்ச்சியோடு இருக்கட்டுமே என்று பேசினால், என்ன சீற ஆரம்பிக்கிறாய்? நான் சீறத் தொடங்கினால் என்ன நேரிடும் தெரியுமா?"

(11-ம் பக்கம் பார்க்க)

# தம்பி

ஆழமான குழி! மிகமிக ஆழமான குழி — ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழ மல்ல, 67000 அடி ஆழமான குழி தோண்டப்போகிறார்களாம். சொல்லிவிட்டார்கள்! எவ்வளவு கஷ்டம் பாவம், இவ்வளவு ஆழமான குழி தோண்ட என்று எண்ணும்போதே எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.


பரிதாபம் காட்டுவது இருக்கட்டும் எதைப்பெற இவ்வளவு ஆழமான குழி தோண்டுகிறார்கள், விஞ்ஞான வளர்ச்சிக்குத் தேவைப்படும் ஏதாவது அரிய பொருள் அத்தனை அடி ஆழத்திலே புதையுண்டு கிடக்கிறது என்பதற்காகவா என்று கேட்கிறாயா! தம்பி! அதற்காக அல்ல. நமக்காக, கழகத்தைப் போட்டுப் புதைக்க!! 67000 அடி ஆழக்குழிதோண்டிப் போட்டுப் புதைக்கப்போகிறோம், தி. மு. கழகத்தை 1967ம் ஆண்டு என்று, திருச்சியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டிலே பேசியிருக்கிறார்கள்.

## ஆழமான குழியாம்!

என்ன செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்க்ள் — ஐந்தாண்டுத் திட்டம் என்கிறார்கள், சமுதாய நலத் திட்டம் என்கிறார்கள், வட்டார வளர்ச்சித் திட்டம் என்கிறார்கள், இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் — நாட்டிலே ஏழை மக்கள் வாழ்விலே பாராட்டப்படத் தக்க விதமான முன்னேற்றம் எதையும் காணாததால் மனம் நொந்து நீ கேட்டிருக்கிறாய் பலமுறை, என்னதான் செய்கிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள்; என்ன செய்யப்போகிறார்கள் இந்தக் காங்கிரஸ்காரர்கள் என்றெல்லாம். அவர்கள் கூறிவிட்டார்கள் திருச்சி மாநாட்டில், என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதை; ஆழமான குழிதோண்டப் போவதாகச் சொல்லிவிட்டார்கள்; 67000 அடி ஆழம்.

என்ன அண்ணா! நம்மைப் போட்டுப் புதைக்கக் குழி தோண்டப்போவதாக அவர்கள் பேசுகிறார்கள் அத்தனை ஆணவத்துடன்; அதைக் கேட்டு நீ பதறாமல் துடிக்காமல், மகிழ்ச்சியுடன் பேசுகிறாயே என்று கேட்கத் தோன்றும். நான் பதறாததற்கும் துடிக்காததற்கும் காரணம் இருக்கிறது.

67000 அடி! கவனமிருக்கட்டும்! அத்தனை ஆழமான குழி! ஏன்? அவர்களுக்கு அவ்வளவு அச்சம், அத்தனை ஐயப்பாடு! சாதாரண ஆழமுள்ள குழி, ஒரு ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி தோண்டினால் போதாது, அதிலே போட்டுப் புதைத்தால் பயனில்லை, மீண்டும் எழுந்து வந்துவிடக்கூடும், மிக அதிகமான ஆழம் தோண்டவேண்டும் என்று தோன்றுகிறதே தம்பி! அவர்களுக்கு; அது எனக்கு நமது கழகம் எத்தனைப் பெரியது, எதிரிகளை எந்த அளவுக்கு அச்சப்படுத்தி வைத்திருக்கிறது என்பதை அறியச் செய்கிறது. அது எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சி உணர்வைக்கூடத் தருகிறது. தி. மு. கழகம் சாமான்யமானதல்ல, இந்தியாவை பத்தொன்பது ஆண்டுகளாகக் கட்டி ஆண்டு வரும் காங்கிரஸ் கட்சியினர், இந்தக் கழகத்தைப் புதைத்து குழியில் போடவேண்டுமென்றால், ஆயிரம் இரண்டாயிரம் அடி ஆழமுள்ள குழி போதாது, 67000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது என்பதை எடுத்துக் காட்டு



# நாப்பறை தட்டி, நச்சுரை நவில்கிறார்!

கிறது அவர்களின் பேச்சு! கழகத்தின் வளர்ச்சியின் அளவை நாடு உணர்ந்துகொள்ளவும் அந்தப் பேச்சு துணை செய்கிறது.

கழகமா? அது எங்கே இருக்கிறது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அதைப் பொதுமக்கள் சீந்துவார்களா என்று கூறிய காலம் போய்,

கழகமா? பத்துப் பேர் கூச்சலிடும் இடந்தானே என்று பரிகாசம் பேசிய காலம் போய்,

கழகமா? கொஞ்சம் துள்ளுகிறது நாலு நாளில் தன்னாலே அடங்கிவிடும் என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உட்குழப்பத்தாலே உருக்குலைந்து போய்விட்டது என்று பேசிய காலம் போய்,

கழகமா? அது உடைபட்டுப் போய்விட்டதே! இப்போது அதிலே என்னஇருக்கிறது!! என்று பேசிய காலம் போய்,

கழகமா? நாங்கள் மூச்சுவிட்டால் காற்றிலே பறக்காதா என்று ஏளனம் செய்த காலம் போய்,

கழகமா? எங்கள் கோபப் பார்வையாலேயே அதனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிட மாட்டோமா? என்று பேசிய காலம் போய்,

கழகமா? எங்களுக்கு அது ஒரு பொருட்டாகுமா! என்று அலட்சியம் காட்டிப் பேசிய காலம் போய்,

கழகமா? அதை 67000 அடி ஆழமுள்ள குழி தோண்டி அல்லவா புதைக்கப் போகிறோம் என்று பேசும் காலம் வந்திருக்கிறதே!!

இது எதைக் காட்டுகிறது? கழகத்தை அலட்சியப் படுத்தியவர்கள், அது தன்னாலே உருக்குலைந்து போகும், உடைபட்டுப் போகும் என்று எண்ணினவர்கள், கழகம் சாமான்யமல்ல, அதைப் போட்டுப் புதைப்பதானாலும், சாதாரணக் குழி போதாது, மிக மிக ஆழமான குழிவேண்டும் என்று கூறிடவேண்டிய அளவுக்குக் கழகம் வளர்ந்து, அவர்களைக் கலங்கிடச் செய்கிறதே, அது தம்பி! எனக்கு ஒருவிதமான மகிழ்ச்சியே கூடத் தருகிறது!

காலஞ் சென்ற சத்தியமூர்த்தி சொல்லிக்கொண்டிருந்தார், ஜஸ்டிஸ் கட்சியை 5000 அடி ஆழத்தில் குழிதோண்டிப் புதைக்கப் போகிறேன் என்று.

இன்றையக் காங்கிரஸ்காரர்கள் அவரை மிஞ்சி விட்டார்கள்; குழி தோண்டுவதில்! வாயால்!! 67000-அடி ஆழக் குழியாம்.

அவ்வளவு கடினமான வேலை செய்யவேண்டும் என்றாகிவிட்டது, கழகம் பெற்றுள்ள வளர்ச்சி.

ஒன்றை மறந்துவிடுகிறார்கள்—கோபம் கண்ணை மறைக்குமாமே, அதனால் என்று எண்ணுகிறேன்—67000 அடி ஆழக் குழிதோண்டிக் கழகத்தைப் புதைக்கத்தக்க வல்லமை உள்ளவர்களானால், இந்த வீரர்கள் கழகம் இந்த அளவு வளர்ந்ததே, என்ன செய்து கொண்டிருந்தார்கள்? ஏன் கழக வளர்ச்சியைத் தடுக்க முடியவில்லை!!

கழகம் இவர்கள் கண்முன்பாகத்தானே வளர்ந்தது; வேறு எங்காவது ஓரிடத்திலே கட்டப்பட்டு இங்கு திடீரென ஒரு நாள் கொண்டுவந்து இறக்குமதி செய்யப்பட்டதா? இல்லையே! இவர்கள் இப்போது இருப்பது போலவே அறிவாற்றலுடன், வீராவேச உணர்ச்சியுடன் இங்கேதான் இருந்துகொண்டிருந்தார்கள், நாம் வளர்ந்தபோது. ஏன் தடுக்க முடியவில்லை, கழக வளர்ச்சியை? வளர்ச்சியைத் தடுத்திட முடிந்திருந்தால் இன்று இத்தனை ஆழமான குழி தேவைப்பட்டிருக்குமா!! பாவம்! 67000 அடி ஆழமல்லவா தோண்டப் போவதாகச் சொல்லுகிறார்கள். ஏன் இத்தனைக் கஷ்டம்! தும்பைவிட்டுவிட்டு வாலைப்பிடிப்பது என்பார்களே, அந்தப் போக்கா?

இப்போது இருப்பதுபோலவே அவர்களிடம் எல்லாவல்லமையும் இருந்தது! பிரசாரம், பணபலம், அதிகாரபலம், எல்லாம்! இப்போது இருப்பதுபோலவே அப்போதும். இவர்களே ஆளவந்தார்கள்! இருந்தும்? கழக வளர்ச்சியைத் தடுத்திட முடிந்ததா? இல்லையே! கழகம் வளர்ந்து வளர்ந்து, இவர்களுக்கு மிரட்சி அதிகமாகி, ஆழமான குழி! மிக ஆழமான குழி! என்றல்லவா அலறுகிறார்கள்.

இவர்கள் வேறு முக்கியமான வேலையாக—அமெரிக்காவைச் சீர் செய்ய—புரட்சியால் இன்னல் அடைந்த ரஷியாவுக்கு இதம் செய்யச் சென்று பல ஆண்டுகள் அங்கே தங்கிவிட்டதுபோலவும், இவர்கள் இங்கே இல்லாத நேரமாகப்பார்த்து நாம் வளர்ந்ததுபோலவும், இவர்கள் இங்கே இருந்திருந்தால் நம்மை வளரவிடாமல் அப்பொழுதே செய்துவிட்டிருக்க முடியும் என்பதைப்போலவும் எண்ணிக் கொண்டு பேசுகிறார்கள்! இவர்கள் அவ்வளவு பேரும், இங்கே விழித்துக்கொண்டும் வீறுப்புப் பேசிக் கொண்டும் இருந்து வந்த நேரத்திலேயேதான், கழகம் வளர்ந்தது.

67000 அடி ஆழமான குழி தோண்டப்போவதாகப் பேசும் இந்த வல்லவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

வளர்ந்தால் வளரட்டும் அது நம்மை என்ன செய்யும் என்று இருந்துவிட்டார்களா என்றால் அதுவும் இல்லையே! அப்போதும், இதே விதமான பேச்சு.

ஒழித்துக் கட்டுவோம்
குழி தோண்டிப் புதைப்போம்
கூண்டோடு தொலைப்போம்
பூண்டோடு ஒழிப்போம்

என்ற முழக்கங்கள்; உருட்டல் மிரட்டல்கள்!

**இன்றைய இந்தியக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் அன்று சொன்ன திருவாய் மொழி தெரியாதா! கழகத்தாருடைய கை கட்டை விரலை வெட்டிவிடுவோம் என்பதல்லவா!!**

எத்தனை விதமான எதிர்ப்புகளை,
எத்தனைக் கலவரங்களை மூட்டிவிட்டனர்!

(13-ம் பக்கம் பார்க்க)

4-ம் பக்கத் தொடர்ச்சி

"தெரியும்?"

"என்ன தெரியும்?"

"என் உயிரைப் போக்க முடியும்-அதைவிட உம்மால் வேறென்ன செய்ய முடியும்?"

"இதென்ன இவ்வளவு சர்வசாதாரணமாக என்னை நினைத்துவிட்டாய் — உயிரைப் போக்குவது கொலைகாரனின் வேலை அல்லவோ? கொலைகாரன் அதைத் தவிர வேறொன்றும் செய்யமாட்டான்—செய்யவும் கூடாது! செய்யும் அதிகாரமும் அவனுக்குக் கிடையாது! நான் யார் தெரியுமா? எனக்கு எவ்வளவு அதிகாரங்கள் இருக்கின்றன தெரியுமா?"

"தெரியாதே!"

"உண்மையாகவே நான் யாரென்று உனக்குத் தெரியாது?"

"தெரியாது!"

"அதுதான் கேட்டேன்—தெரிந்திருந்தால் இவ்வளவு மோசமாக என்னிடம் நடந்துகொண்டிருக்க மாட்டாய்! நான் சேரநாட்டின் இள்வரசன் கனகசேனன்-தெரிந்துகொண்டாயா? அட, என் பெயரைக் கேட்டால் எல்லோரும் ஓடிவந்து தொழுது நிற்பார்கள்! நீ என்னடா என்றால் திடுக்கிடவுமில்லை—திரும்பிப் பார்க்கவும இல்லை! என்ன ஆச்சரியம்! ஒருவேளை ... ஒருவேளை —நீ என் பேச்சை நம்பவில்லையா!"

"ஆமாம்!"

"அட! திருமேனியும் என் சொல்லை நம்பவில்லை — சேரநாடு என்றொரு நாடே இல்லாதபோது, அதற்கென்று ஒரு இளவரசன் எப்படியிருக்க முடியும் என்று கேட்டாள்!"

"அவள் கேட்டதில் தவறு ஒன்றுமில்லையே!"

"சரிதான்! அவளைப்போல உனக்கும் பைத்தியம்தான்! இந்த உண்மை தெரியாமல் இவ்வளவு நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தேனே!"

"உம்மைப் பார்ப்பதற்குமுன்பே தங்களைப்பற்றித் திருமேனி என்னிடம் கூறியிருக்கிறாள்! நினைவிலிருக்கிறது! அது நன்றாக இன்னமும் என் நினைவிலிருக்கிறது!"

"என்னைப்பற்றித் திருமேனி கூறினாளா-என்னவென்று?"

"உண்மையைக் கூறினாள்!"

"அதுதான் என்னவென்று கேட்கிறேனே?"

"இப்பொழுது அதெல்லாம் எதற்கு?"

"இல்லை, அதை நீ சொல்லித்தான் ஆகவேண்டும்!"

"வேண்டாம் — வேதனை அடைவீர்கள்!"

"முடியாது—சொல்லித்தான் ஆகவேண்டும்!"

"சரி, சொல்லட்டுமா?"

"பேச்சை நிறுத்திவிட்டு, எதற்காக என்னை இப்படிப் பார்க்கிறாய்?"

"தாங்கள் அதிர்ச்சியடையமாட்டீர்களே?'

"மாட்டேன்!"

"கோபம்......"

"கொள்ளமாட்டேன்!"

"திருமேனி சொன்னாள்—கனகசேனன் ஒரு பைத்தியம், அதிலும் முழுப் பைத்தியம் என்று!"

"ஆ! திருமேனி அப்படியா சொன்னாள்? என்று ஏக்கத்தோடு கேட்டபடி, எதிரிலிருந்த கட்டிலில் போய் சோர்ந்து உட்கார்ந்துவிட்டான்."

அவன் போக்கைக் கண்டு, அஞ்சலை மனத்திற்குள்ளேயே சிரித்துக்கொண்டாள்.

"இவரை அரைப் பைத்தியம் என்று முன்பு புத்த விகாரத்தில் எண்ணியது சரியாகிவிட்டது! இந்தப் பைத்தியத்திற்கு ஏற்ற விதத்திலேயே நாமும் நடித்தால்தான், தப்ப முடியும்!' என்று எண்ணிய மறுநொடியே, 'என்னதான் அதிகாரம் இருந்தாலும், இப்படியா அக்கிரமம் செய்கிறது! எந்த மக்களைக் காத்துப் பராமரிக்க வேண்டுமோ, அதே மக்களை வேட்டையாடினால்—முடிவு என்னவாகும்!' என்று அல்லியிடம் கனகா என்ற தோழி கூறியது, அஞ்சலையின் கவனத்திற்கு வந்தது.

உடனே பயம் அவள் உள்ளத்தில் கப்பிக்கொண்டெழுந்தது.

'அரசகுமாரர்களே இயற்கையில் ஆணவம் பிடித்தவர்கள்! அந்த ஆணவத்தோடு பைத்தியமும் பிடித்துக்கொண்டால், அக்கிரமத்தின் எல்லைக்கே அவர்களை இழுத்துக்கொண்டு போய்விடுமா? கோமாளியைப்போல இவர் தோற்றமளித்தாலும்–தோழிகள் பேசிக்கொண்டதிலிருந்து — அநீதிகள் பல இவரால் இழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறதே! மனிதனும் மலரைக் கசக்கிப் போடுகிறான்–மந்தியும் கசக்கிப் போடுகிறது! மனிதன் சுய நினைவோடு செய்கிறான். அப்படிச் செய்கிறோம் என்பது புரியாமலேயே மந்தியும் செய்துவிடுகிறது! எண்ணம் எதுவாக இருந்தால் என்ன, மலர் கசக்கப்பட்டது, கசக்கப்பட்டதுதானே? அதைப்போல, இந்த குரங்கின் கையில் கிடைத்த மலர் தானா நான்? என் வாழ்வும் கசக்கியெறியப்படப் போகிறதா?" என்றெண்ணி ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டபடி, அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

கட்டிலில் உட்கார்ந்திருந்த அவன், கைகளை கன்னத்தில் ஊன்றியவாறு ஏதோ பலமானயோசனையில் ஆழ்ந்துவிட்டிருந்தான்.

"திருமேனி தன்னைப் பைத்தியம் என்று சொன்னதை நினைத்து, இந்தப் பைத்தியம் கவலைப்படுகிறதுபோலிருக்கிறதே!' என்று அஞ்சலை தனக்குத்தானே கேலியோடு சொல்லிக்கொண்டு, தரையில் விரிக்கப்பட்டிருந்த அழகிய வேலைப்பாடுகள் செய்த கம்பளி விரிப்பில் உட்கார்ந்தாள்.

திருமேனி தன்னைப் பைத்தியம் என்று சொன்னதை நினைத்தா, கனகசேனன் கவலையில் மூழ்கிவிட்டிருந்தான்? இல்லை அவன் மனதில் அலைமோதிக்கொண்டிருந்த எண்ணங்களே வேறு!

"அஞ்சலை அழகு மிளிரும் கன்னிப்பெண்! தன்னந்தனியாக ஒரு கிழவரோடு செல்லும் அந்தத் தளிர்மேனியாளைத் தூக்கிவரச் செய்து, சிங்கார மாளிகையில் சிறை வைக்கவேண்டும்! அந்த எழிலுடலாளிடம், உள்ளத்தில் பொங்கும் ஆசையைச் சொல்லவேண்டும்! சரி என்றால் மகிழ்ச்சி! இது அக்கிரமமாயிற்றே, அநீதியாயிற்றே என்று அழுது புலம்பி அகன்றுபோனால்-இருக்கவேயிருக்கிறது, பலாத்காரம் என்ற ஒப்பற்ற ஆயுதம்!' என்ற வெறியுணர்ச்சியினால் அஞ்சலையை அவன் தூக்கிவரச் செய்யவில்லை.

ஒரு நாள் அவனுக்கு மிகவும் வேண்டிய சேவகர்களில் ஒருவன் மேல் மூச்சு வாங்க ஓடிவந்து, "இளவரசே! வந்தது ஆபத்து! மோசம்போனோம்!" என்று நாக் குழறக் கூறினான்.

"எதற்காக இப்படி ஆயாசப்படுகிறாய்? செய்தியை நிதானமாகக் கூறு!" என்றான கனகசேனன்.

"இளவரசி! திருமேனியை ஒரு பௌத்த துறவி எப்படியோ

மயக்கி, அழைத்துக்கொண்டு போகிறுன் இளவரசே, அழைத்துக் கொண்டுபோகிறுன்!''

''என்ன கர்வமடா உனக்கு, திருமேனியைத் துறவியொருவன் மயக்கிவிட்டான் என்று என்னிடமே வந்து சொல்ல!''

''அய்யோ! நான் பொய்சொல்லவில்லை, இளவரசே! கண்ணுல் பார்த்ததைச் சொல்கிறேன்! அவர்கள் இருவரும் சிரித்துப் பேசிக்கொண்டுபோனதை, இந்த இரண்டு கண்களாலும் நான் பார்த்தேன்! சத்தியமாகப் பார்த்தேன்! அவர்கள் சேரநாட்டு எல்லையைக்கூடத்தாண்டி பாண்டிய நாட்டில் நுழைந்துவிட்டார்கள்!''

''ஆ! அப்படியா செய்தி! ஓடு! ஓடிப்போய் நம் ஆட்களை அழைத்துக்கொண்டு பாண்டிய நாட்டினுள் நுழைந்து, அந்தத் துறவியை அடித்துப் போட்டுவிட்டு, என் ஆசைக்குரிய திருமேனியைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுங்கள்!'' என்று கனகசேனன் கட்டளையிட்டதும், அச்சேவகன் ஓடினுன்.

சேவகனை அனுப்பிவிட்டு, உடனே கனகசேனன் புத்தபுரத்திற்கு ஓடினுன்.

பராக்கிரமபாகுவிடம் தேம்பியவாறு இந்தச் செய்தியைச் சொல்லிக்கொண்டிருந்த போது, அந்த அறையினுள் சிரித்த முகத்தோடு திருமேனி வருவதைக் கண்டதும், அவன் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது.

''அவமானம்! அவமானம்! பெருத்த அவமானம்!'' என்று முணுமுணுத்தபடி, வெளியே வந்துவிட்டான்.


திருமேனி என்று நினைத்தே அஞ்சலை தூக்கிவரப்பட்டாள்! நடந்த தவறை வெளியில் தெரியவிடக்கூடாதென்றே, அவளைக் கொஞ்ச நாட்களுக்குத் தனதுவிளையாட்டு மாளிகையில் சிறைவைக்கும்படிக் கட்டளையிட்டான்.

அவள் பயந்து நடுங்கும்படி சிறிதுநேரம் நடித்து, பிறகு நேர்ந்த தவறை வருத்தத்தோடு எடுத்துச்சொல்லி இரகசியமாக அவளைத் தன் ஊருக்கு அனுப்பிவிடவேண்டும் என்ற எண்ணத்தோடே அன்று அங்கு வந்தான்.

''திருமேனி சொன்னுள் — கனகசேனன் ஒரு பைத்தியம், அதிலும் முழுப் பைத்தியம் என்று!''

இப்படி அஞ்சலை சொல்லியதைக் கேட்டபிறகு, அவன் தன் முடிவை மாற்றிக்கொண்டான்.

''திருமேனிக்கும் இவளுக்கும் நெருங்கிய பழக்கம் உள்ளது போலிருக்கிறது! ஆகவேதான் இளவரசியான அவளை, இவள் அவள் என்று சொல்கிறுள்! இப்பொழுது அஞ்சலையை வெளியே அனுப்பி



ஞல், செய்தியைத் திருமேனியிடம் கூறினுலும் கூறிவிடுவாள்! அதைக் கேட்டுத் திருமேனி ஆத்திரமடைந்து என்னைத் திருமணமே செய்துகொள்ள முடியாது என்று மறுத்தாலும் மறுத்துவிடுவாள்! ஆகவே திருமேனி என் கைக்கு வரும்வரை, இவளை இங்கேயே சிறைவைத்திருக்கவேண்டும்! அதுவரை இவள்மீது ஆசைகொண்டவனைப்போலவும், அதற்காகவே தூக்கிவரச் செய்ததாகவும் நடிக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தோடு கனகசேனன், பார்வையை அஞ்சலை பக்கம் திருப்பினுன்.

''அஞ்சலை இப்படி வா! வந்து என் அருகில் உட்கார், கண்ணே'' என்று புன்னகையோடு அழைத்தான்.

''ஆ! இதென்ன அக்கிரமமான பேச்சு?'' என்று திடுக்கிட்டு அவள் அலறிவிட்டாள்.

அவள் அலறலைக் கேட்டுப் பயந்த கிளி, வளையத்தை விட்டுத் தாவி, கனகசேனனின் தோளின் மீது வந்து உட்கார்ந்துகொண்டது.

அந்தக் கிளியைப் பிடித்துத் தடவியவாறு, ''நீயே எழுந்துவருகிறுயா, அல்லது நான் வரட்டுமா? மரியாதையாக அழைத்தால் வருவாயா—வரமாட்டாய்! கோலெடுத்தால்தானே குரங்கு ஆடும்! பெண்களும் அப்படித்தான்'' என்று சொல்லிக்கொண்டேஎழுந்து, அவள் அருகில்வந்தான்.

அவளது பார்வையில், அச்சமும் ஆத்திரமும் மாறி மாறித் தோன்றின.

''எழுந்திரு! எழுந்திரு!'' என்று சிரித்துக்கொண்டே, கிளியை அவள் முகத்தருகே கொண்டுசென்றுன். பயத்தால் அந்தக் கிளி தன் சிறகைப் படபடவென்று அடித்துக்கொண்டது.

அவள் மெதுவாக எழுந்து நின்றுள்.

''அட அட! நான் என்ன செய்துவிட்டேன்? எதற்காக இப்படிப் பயப்படுகிறுய்? அஞ்சாதே! மனதைத் தேற்றிக்கொள் – அத்தோடு மாற்றியும்கொள்! நாளை இரவு வருகிறேன்!'' என்று கிளியைத் தூக்கி மேலே விட்டுவிட்டு அவ்வறையினின்றும் வெளியே சென்றுவிட்டான்.

அஞ்சலை கத்தியின் முனையைத் தடவிப் பார்த்தபடி, கட்டிலின் மீது போய் உட்கார்ந்தாள்.

''நாளை வருகிறுனுமே — வரட்டும்!'' என்று பற்களை நற நறவென்று கடித்தாள்.

பின்புறம் ஏதோ சப்தம் கேட்கவே, சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

பலகணியின் வழியாகத் தாவிக் குதித்து, தன்னை நோக்கி ஒருவன் நடந்து வருவதைக் கண்டதும், அவள் வாய்விட்டு அலறிவிட்டாள்!

[வளரும்]

# கள்ளக்குறிச்சி காட்சிகள்....

கடந்த திங்கள் 27, 28ம் நாள் தென்னாற்காடு மாவட்ட மாநாடு, கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது.

இதுவரை நடைபெற்று முடிந்த மூன்று மாநாடுகளையும்விட இம்மாநாடு ஒரு புதிய திருப்பத்தைச் சந்தித்திருக்கிறது. இதன் ஊர்வலச் சிறப்பை உள்ளது உள்ளபடியே அன்றி, எவ்வளவுதான் மிகைப்பட வருணித்தாலும், எந்தெந்த கோணத்தில் நின்று, அதன் உணர்ச்சியைப் புரிந்துகொள்ளப் பார்த்தாலும், நினைத்தாலும் பக்க நின்றுக் கேட்டாலும் ஒருவரம்பிட இயலாது என்பதில் மிகையில்லை. உணர்ச்சிப் பிழம்பாய் உருமாறிப் போன பெண்களின்பேரணி எழுப்பிய முழக்கங்களின் மோதுதலினாலே, காங்கிரசின் ஏகாதிபத்திய வெறித்தனம் வீழ்த்தப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை, புதிய தெம்பு கொடுப்பதாய் இருந்தது. அதாவது பெண்கள் படை, பெரும் படையாய் ஊர்வலத்தில் இருவண்ணக் கொடியேந்தி, இலட்சிய முழக்கங்களை முழங்கியவாறு வீறு நடையிட்டு வந்தது.

'பெண்களை நம்பாதே!' என்ற பாடல் நினைவுக்கு வந்ததினாலோ என்னவோ, ஆண்கள் பட்டாளமும், உங்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்லர் என்று, அகமிக மலர ஆவேச உணர்வோடு, 'ஆதிக்க ஆணவத்தை அழித்தே தீருவோம்' என்ற தன்மையராய் காணப்பட்டனர்.

புதுமை என்னவெனில், ஊர்வலத்தில் பெண்களின் பேரணி கண்டு, ஆண்கள் அணி ஆவேசப் பட்டதுதான்!

இதனை முடித்துக்கொண்டு மாநாட்டுத் திடலுக்கு வந்ததும், **துரை. முருகன்**, கழகக்கொடி ஏற்றி வைத்தார்.

அதனையடுத்து **நாகூர் அனீபா** இன்னிசை வழங்கினார்.

மாநாட்டு நிகழ்ச்சியின் தொடக்கமாக, துரை. முருகன், கொடிச் சிறப்புபற்றியும், காங்கிரஸ் அமைச்சர்கள், நாட்டு மக்களைப் பார்த்து எலி, பூனை இவைகளைத் தின்னக்கூறும் ஆணவத்தை, அழிக்க 1967 தேர்தல் தவிர வேறு வாய்ப்பில்லை என்றும் சொற்பொழிவாற்றினார்.

மாநாட்டைத் திறந்துவைத்து **பி. சிவசங்கரன்.** எம்.பி. 19 ஆண்டுக்கால காங்கிரஸ் ஆட்சியில் தாழ்த்தப்பட்டோரின் வாழ்வு உயரத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும், அண்ணா அவர்கள் ஒருவரினாலேயே சோஷலிசத் திட்டத்தை ஒழுங்காகவும், உள்ளபடியும் நிறைவேற்ற முடியும் என்றும் கூறினார்.

தென் ஆற்காடு மாவட்டச் செயலாளர் **இரா. சாம்பசிவம்**, சாதி அரசியலால் உண்மையான முன்னேற்றத்தைக் கொண்டு வந்துவிட முடியாது; நமக்குள்ளே வன்மைமிக்க ஒற்றுமை உணர்வோடு தேர்தலிலே பாடுபட வேண்டும் எனக்கூறி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

அதன்பின் பல வட்டச் செயலாளர்களும் தலைவரை வழிமொழிந்துப் பேசிய பின்னர், வழக்கறிஞர் **வில்லாளன்**, நாற்றங்கால், வயல் இதனை உவமித்துக்கூறி, தியாகப் பரம்பரையின் பெருமை பேசி, தலைவரை வரவேற்றார்.

இதேபோல், ஏ. **கோவிந்தசாமி**, ஜனநாயக அணி என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக தி. மு. கழகம் இருக்கிறது என்பதற்குச் சிறந்த சான்றுதான் தலைவர் தெரிவு என்றும், கழகத்தில் எந்த மட்டத்திலும் உள்ள எந்த ஒருவரது தியாகமும் வீண்போகவில்லை என்றும், அதன் எதிரொலிதான் தலைவர் தியாகப்பரம்பரை உடையார் பாளையம் வேலாயுதம் அவர்களது குடும்பத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதுமாகும் என்று வழிமொழிந்து பேசினார்.

அடுத்து தலைவர் **கே. என். இராமச்சந்திரனுக்கு, கிராமாதிகாரிகள்** சார்பில் தாங்கள் எந்த அளவுக்குக்கீழ் நிலையிலிருக்கிறோம், ரூ. 11 மட்டுமே அடிப்படை ஊதியமாகப் பெறுகிறோம் என்று கூறி, அதன் அடையாளமாக 11 மாலைகளை அணிவித்தபோது, ஆளும் கட்சியைப்பற்றிய ஐயப்பாடு அனைவர் அகத்திலும் முகத்திலும் ஒளி விட்டது!

தலைவர் தன் தலைமையுரையில், புகழ் வள்ளலாயும், பொருள் வள்ளலாயும் இருந்த பாரிவள்ளல் வாழ்ந்த தென்ஆற்காடு மாவட்ட மாநாட்டிற்குத் தன்னைத் தேர்ந்தெடுத்தமைக்கும், பலவாறும் புகழுரைகளால் தன்னையும், தியாகப் பரம்பரையையும் புகழ்ந்தபெருமைகள் யாவும் அறிஞர் அண்ணா அவர்களுக்கே சாரும் என்றும், தமிழின் பேரைச் சொல்லி துரோகிகள் பலர் வாழும் இந்த நாட்டில், அண்ணாவாழ, தமிழ் வாழும், அறம் வாழும் என்றும், அதற்கான சான்றுகள் பல காட்டி, கடந்த 19 ஆண்டுக்கால ஆட்சியில், இந்திய—பாக். பிரிவினைக்குப்பின்பொருளாதார வளர்ச்சியில் பாகிஸ்தான் 58 விழுக்காடு; இந்தியா 4-விழுக்காடுதான் என்று ஆதாரங்களோடு கூறி, சிறப்பாக நினைந்து நினைந்து அறிவுபெறத் தக்க ஓடக்காரன்—பிரயாணி உவமையொன்று கூறித் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

முன்னாள் மேயர் **சிட்டிபாபு** பேசுகையில், தங்கக்கட்டுப்பாடு சட்டம் வந்தபோது, காமராசரைச் சந்தித்து இதுபற்றிக் கூறியபோது **'தன்னை எவன் மதிக்கிறான்; தன் பேச்சை எந்த மந்திரி கேட்கிறான்'** என்று கூறிய அவர், சில தினங்களுக்குமுன் கட்டுப்பாடு சட்டம் ரத்துபற்றிக்கட்சியின்யோசனைக்கு விடப்பட்டபோது, இதுபற்றி வாய்திறவாமல், கண்ணையும் மூடிக் கொண்டது ஏன்? என்றும், இப்படிச்சொல்லொன்றும் செயலொன்றுமாக இருக்கும் காமராசரால் நாட்டுக்கு நன்மையுண்டா? என்றும் கேட்டார்.

அவரைத் தொடர்ந்து பேசிய **நாஞ்சில் கி. மனோகரன்.** நாடுபூராவும்சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் நிகழ்ந்த ஜனநாயகப் பாரம்பரியத்துக்கு முரணான நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டியும், பாராளுமன்றத்தில் கழகம் எத்துணைப் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டது என்பதை விளக்கியும், காங்கிரசின் மிருகத்தனமான பெரும்பான்மையால்—அது கொண்டிருக்கும் ஆணவமே இப்படிப்பட்ட ஜனநாயகச் சீர்குலைவுகளுக்குக் காரணம் எனவும், தமிழக எதிர்க்கட்சியைப்பற்றி வடநாட்டு காங். அமைச்சர்களும்,

உறுப்பினர்களும்கூட பாராட்டுவதாகவும் கூறினர்.

1967-ல், திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றினால்தான்காங்கிரசின்சர்வாதிகாரமிருகத்தனத்துக்கு ஆபத்து வரப்போகிறது என்றும் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு நாட்டின் நாணயத்தைத்தான் கெடுத்தார்களே தவிர, உண்மை வளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை என்றும் சரியான ஆதாரங்கள் கொடுத்து **ஆசைத்தம்பி** விளக்கினர்.

முதல்நாள் நிகழ்ச்சியின் இறுதியாக **பேராசிரியர் அன்பழகன்,** தி. மு. கழகம் தோன்றி இராவிட்டால் இந்த நாட்டு மக்கள், மக்களாகவே வாழ்ந்திருக்க முடியாதென்றும், உரிமை (ஓரளவு) பெற்றோராகக்கூட இப்போது இருக்க இயலாதென்றும், இந்த நாட்டு வாக்காளர்கள், தாங்கள் பெற்றிருக்கும் வாக்குக்குப் பெருமை பெற்றோராகக்கூட இருக்க முடியாது என்றும், காங்கிரஸ் அமைப்புக்கூட தி. மு. க. இல்லாவிட்டால் இத்துணை ஒழுங்கோடு, வாக்குப் பெறுவதில் அக்கறையோடு, இருக்காதென்றும் தமிழ்ப் பண்பாடுகூட கட்டிக் காப்பாற்றப்பட்டிராதெனவும், குழந்தை இல்லாத — திருமணம் ஆகாத காமராசருக்குப் 'பிதா' பட்டம் எப்படிப் பொருந்தும் என்றும் **'தேசப்பிதா'** என்று அவரை அழைப்பதில் எழுத்துப்பிழை ஏற்பட்டுள்ளது! அவரை **'சேதப்பிதா'** என்று அழைப்பதுதான் பொருந்தும் எனவும் சிறந்த விரிவுரை ஆற்றினர்.

மூத்தவர் முடித்த முதல் நாள் நிகழ்ச்சியை, அவரது இளவல் **க. அறிவழகன்,** இரண்டாம் நாள் தொடங்கிவைத்தார். அவர் பேசுகையில், இந்த ஆட்சியினர் பல்லாண்டுகளுக்கு முன்பே சிந்தித்துச் செயல்பட்டிருக்க வேண்டியவைகளை, இப்போதுதான் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள் எனவும், **'சோஷலிசம் கவைக்குதவாதது'** என்று அன்று பேசிய உள்துறை அமைச்சர் நந்தா இன்று எந்தத் தெளிவின்மீது சோஷலிசத்துக்கு வக்காலத்து வாங்குகிறார் என்றும், சோஷலிசம் எனும் குயிலை, டாடா, பிர்லா, பஜாஜ் எனும் முதலாளித்துவ கூண்டுக்குள் போட்டு அடைக்க முடியாதெனவும் சொன்னார்.

அவரையடுத்து, **திருமதி. சத்தியவாணிமுத்து** அம்மையார், **காங்கிரஸ் அமைச்சர்களும், காங்கிரஸ்காரர்களும்** தாங்கள் ஒருவர்க்கொருவர் குற்றஞ்சாட்டிக்கொண்டும், கருத்துக்களில் முரண்பாடுகொண்டும் தாக்கிக்கொண்டிருக்கும் நிலைமையை வளர்த்துக்கொண்டு விட்டபின்பு, எந்த தைரியத்தில், நம்பிக்கையில் வாக்குக் கேட்க மக்களை அணுகுகிறார்கள் எனக் கேட்டுவிட்டு, பொழுதுபோக்குக்காகமேடையேறிப்பேசுவதன்மூலம் நாட்டு மக்களது வாழ்க்கைத்தரம் உயர்ந்துவிடுமா? எனவும் காங்கிரசுக்கு வினாவிடுத்தார்.

இந்தித் திணிப்பின்போது தியாகச் செம்மல்களாகிவிட்ட அரங்கநாதன் ராஜேந்திரன், சின்னச்சாமி போன்றவர்களது தியாகத்தையே இழித்தும், பழித்தும் பேசி சட்டமன்றப் பதிவேட்டில் ஒரு களங்கமான மரபை உண்டாக்கிவிட்டுள்ள பக்தவத்சலத்தின் அகந்தையும், அலட்சியத் தன்மையும் 1967-ல் அகற்றினலல்லாமல் நாட்டுமக்களுக்கு விடிவில்லையெனவும், நெல்லை நகரமன்றம்பற்றி நீதிமன்றத் தீர்ப்பையடுத்து, நீதிபதியின் தீர்ப்பு நகல் பெறாமலேயே அன்றே எப்படி அப்பீல் செய்துகொள்ள முடிந்தது எனவும், நீதி, நிர்வாகத்திற்கு எப்படி நெளிந்து கொடுக்கமுடிகிறது எனவும் **கே. ஏ. மதியழகன்** கேட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தூய தன்மைகளையும், பணிகளையும் இழித்தும் பழித்தும் பேசி வந்த காங்கிரஸ் பெண் பேச்சாளர் பீபி அம்மையார், பெங்களூரில் இளம் பெண்களை வைத்து விபசாரம் நடத்தியதாகக் கைது செய்யப்பட்டு, ஓராண்டுக்காலம் தண்டனை தரப்பட்டிருக்கிறார் எனவும், அத்தகைய வணிக மரபு காங்கிரசில் இன்று நிறையஎன்றும் கடலூர் வழக்கறிஞர் **இளம்வழுதி** உணர்ச்சிப் பெருக்கோடு எடுத்துக்காட்டி, கழகத்தின் தூய தன்மையை விளக்கினர்.

அடுத்து **இரா. செழியன் எம். பி.** பேசுகையில், சரியான ஆதாரங்களும், அவைமூலம் 10,15 ஆண்டுகள் வரையும் தண்டனைகள்கூடத் தரமுடிந்த அளவுள்ள பலப்பல குற்றச்சாட்டுக்கள் இன்றைய பல காங்கிரசு அமைச்சர்மீது கூறப்பட்டும், சரியான தீர்வும், விசாரணையுமின்றி இருப்பதும், தேர்தல் நிதியென இலட்சம் இலட்சமாகக் கொடுத்து முதலாளிகள் சட்டப் பாதுகாப்போடு அல்ல, சர்க்கார் பாதுகாப்போடு வாழும் வகை தேடிக்கொண்ட நிலையும் சீரான— ஒழுங்கான ஆட்சிக்கு அணியாகாது என்றார்.

பம்பாயில் ஆலைமுதலாளிகள் சிலர் கூடி, ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு தருவதை நிறுத்தியும், பஞ்சப்படி கொடுப்பதில் குறைப்புச் செய்தும் பொருளாதார நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் எனக் கூறிய யோசனையையும், சென்னையில் தென்னிந்திய வர்த்தகக் கழகம் கூடி, ஊதிய முடக்கம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டதன் எதிரொலிபோலத்தான், ஆட்சியினரின் ஊதிய முடக்கக் கொள்கை இருப்பதாக**இராகவானந்தம்** எடுத்துக் காட்டினர்.

ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த இந்திராகாந்தி அம்மையார், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது சென்னைக்கு ஓடிவந்து, மொழிக்கொள்கையில் மறு ஆய்வு தேவை என்றவர், இன்றைக்குப் பிரதமராகிவிட்டப்பின்பு, இந்தியைத் திணிக்கத் தீவிரம் காட்டுவதும், மொழிக் கொள்கையில் ஆட்சிமொழிச் சட்டத்தைத்திருத்த காலம் தள்ளிக்கொண்டே போவதும் ஏன் என்று கேட்டுவிட்டு, தி. மு. க. குரல் கொடுத்தபின்பதான் சர்விஸ்கமிஷன் தேர்வுக்கு 14-மொழிகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலை பிறந்திருக்கிறது என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டினர் **புலவர் அறிவுடைநம்பி.**

**எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ.** பேசுகையில், பற்றாக்குறை பற்றிப் பேசும் பரிதாபத்திற்குரிய இந்த அரசு, சரியான, போதிய நீர்ப்பாசனத் திட்டங்களைக் கூட மேற்கொள்ளவில்லை என்று எடுத்துக்காட்டினர்.

நீதியும் நிர்வாகமும் இணைந்திருப்பதால் எந்த அளவுக்கு ஊழலும், அநீதியும் ஏற்படுகிறது என்பதை எடுத்து விளக்கி, இந்த இருதுறையும் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை எழுப்ப, தி. மு. க-வைத் தவிர, தமிழகத்தில் நாதியில்லை என்று எடுத்துக்காட்டினர், வழக்கறிஞர் **நாராயணசாமி.**

**மேயர் மோசஸ்** பேசுகையில், நகராட்சி, ஊராட்சி மன்றங்கள் எதுவாக இருந்தாலும் அதிக அளவுக்கு

அதிகாரம் படைத்ததாக இருந்தால் தான் ஜனநாயகம் காப்பாற்றப்பட முடியுமெனவும், பொறுப்புக்களை ஒழுங்காக நிறைவேற்ற முடியும் எனவும், இத்துறையைப் பொறுத்த அளவில், இந்த ஆட்சியினரின் இப்போதைய நடைமுறை ஐயுறத்தக்கதாயிருப்பதாகவும் எடுத்துக்காட்டினார்.

**ஆர். தங்கவேலு எம் எல். ஏ.,** விவசாய அலுவல்களை ஒழுங்காகக் கவனிக்கவும், தேவைகளைப் பெற்றுக்கொள்ளவும் இடையூறாக இருக்கும் நிலையில் தென் ஆற்காடு மாவட்ட அமைப்பு இருப்பதாகவும், இதனை ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் பற்றியும் எடுத்துக் காட்டினார்.

நாணயச் செலாவணிக் கொள்கையை இந்த அரசு ஒழுங்காக—நேர்மையாகக் கடைப்பிடிக்காத காரணத்தால்தான் ரூபாய் நாணய மதிப்புக் குறைக்கவேண்டிய நிர்ப்பந்தம் வந்ததாகவும், இதற்கு முழுக் காரணமும் காங்கிரஸ் ஆட்சி செய்த தவறுதான் எனவும் சுட்டிக் காட்டினார் சட்ட மன்ற உறுப்பினர் **கிருஷ்ணமூர்த்தி.**

**கவிஞர் வேழவேந்தன்,** குறைந்த தொகை மூலதனமிட்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுத்த போதே, ஒவ்வொரு திட்டத்தின் போதும் சேலம் உருக்காலை பற்றிக் கூறிவந்த அரசு 23,000 கோடி ரூபாய்க்கு பரும்மாண்ட திட்டமிட்டிருக்கிறபோதில், திட்டத்தை ஏன் சேர்க்கவில்லையெனக் கேட்டுச் சாடினார்.

சேலம் உருக்காலைக்கு உத்திரவாதம் கொடுத்துச் சென்ற தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம், வெறுங்கையோடு வந்து வாய் வீரம் பேசுவதை விட்டு விட்டு பதவி துறப்பதுதான் நாணயமான செயல் என்று விளக்கினார் மக்களவை உறுப்பினர் **தர்மலிங்கம்.**

**எஸ். எஸ். ராசேந்திரன்** பேசுகையில், காங்கிரஸ் தன் கூட்டத்திற்கு ஆள் சேர்க்கக் கூலி கொடுக்கிற நிலையிலிருக்கிறதெனவும். கழகத்தின் நிலை, உணர்ச்சிமிக்கத் தொண்டர்களையும், ஆர்வமிக்க தோழர்களையும் கொண்டிருப்பதா யிருப்பதாயும் கூறினார். எலிக் கறி சாப்பிடவேண்டும் எனக் கூறிய காங்கிரசார், திருச்சி காங்கிரஸ் மாநாட்டில், எலிக்கறி சமைத்துப் போட்டு முன்மாதிரியாக நடந்துகொண்டிருக்க வேண்டும் என்றும் **அவர்** சொன்னார். காமராஜர் கோடிக் கணக்கில் பாங்கியில் பணம் சேமித்திருக்கிறார் என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்களுக்கு இதுவரையில் பதிலளிக்காததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவரை யடுத்து **என். வி. நடராசன்** பேசினார். அவர் பேசும்போது, காங்கிரஸ் எந்த அளவு பித்தலாட்டங்கள் புரியத் தலைப்பட்டுவிட்டது என்பதைக் கூறி, காமராசரின் கீழ்த்தரமான பேச்சை விளக்கி உணர்ச்சி வயப்பட்டுப் பேசினார். காமராசரைப் பற்றிய ஒரு கருத்தைக் கூறுகையில், அறிஞர் அண்ணா கேட்டுக் கொண்டபடி அவர் வருத்தம் தெரிவித்துக்கொண்டது, தி. மு. க. வின் அரசியல் நாணயத்தை விளக்கிக் காட்டுவதாக இருந்ததென வந்திருந்த பத்திரிகையாளர்கள் ஒருமுகமாக ஒப்புக்கொண்டனர்.

**கலைஞர் கருணாநிதி** பேசும்போது, தியாகிகளையும், தியாகத்தையும் மறக்காமல் மதித்து செயல்பட்டு வருவது தி. மு. க. ஒன்றுதான் என்றும், எத்தனையோ தீர்மானங்களை நாம் நம் மாநாடுகளில் நிறைவேற்றி இருக்கிறோம்; இன்னொன்றும் பாக்கி இருக்கிறது. அது 1967 பொதுத் தேர்தலில் காங்கிரசை வீழ்த்தியாக வேண்டும் என்ற தீர்மானம்தான். அதையும் நிறைவேற்றிக் காட்டுவோம் என்றார். முதலமைச்சர் பக்தவத்சலத்திற்கு, நம்மைப் பார்த்து 'ஆளும் தகுதி இல்லை' என்று கூறும் தகுதியில்லையென்றும், தஞ்சைக்கும் செங்கோட்டைக்கும் தூரம் எவ்வளவு என்பதைக்கூட கணித்தறியத் தெரியாமல் பஸ் போக்குவரத்தில் பல லட்சம் இழப்பு ஏற்படச் செய்துள்ளனரென்றும், இதுகூடத் தெரியாதவர்களுக்குச் சிலைக்காரன் எவ்வளவு சதுரக் கற்களை அபகரித்துக் கொண்டுவிட்டான் என்று சரியாகக் கணிக்கத் தெரியுமா? என்றும் உணர்ச்சிகரமாகக் கேட்டார். எதிர்க்கட்சியாக இருக்கும்போதே, காங்கிரசின் ஊழல்களை இந்த அளவு எடுத்துக்காட்டும்போது, நாம் ஆளும் நிலை பெற்றுவிட்டால், பழைய பைல்களிலுள்ள ஊழல்களை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு வந்துவிட்டால், தங்கள் நிலை என்னாகும் என்ற கவலையாலும், பயத்தாலும்தான், நம்மை இந்த அளவு காங்கிரஸ் எதிர்க்கிறது என்றும் அவர் விளக்கினார்.

அவரையடுத்துப் பேசிய **நாவலர் நெடுஞ்செழியன்,** பொதுமக்கள் கொடுக்கிற வரிப்பணத்திலிருந்து காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்திற்குச் சுவரொட்டிகள் அச்சிடப்படுகின்றனவென்றும், யார்யாருக்கு எந்தெந்த தொகுதியில் வெற்றி வாய்ப்பை எதிர்பார்க்கிறார்களோ, அந்த அந்த தொகுதிகளுக்கு எந்தெந்த அதிகாரிகள் இருந்தால தங்களுக்கு வசதி அதிகமாயிருக்கும் என்று நினைக்கிறார்களோ, அவர்களையெல்லாம் இப்போதே மாற்றிக்கொண்டிருக்கிறார்கள் என்றும் குற்றஞ் சாட்டினார்.

இந்தக் கொடுமைகள் எல்லாம் களையப்பட, ஊருக்கு ஊர் கிளைக் கழகங்கள் உடனே தோற்றுவிக்கப் படவேண்டும் எனவும், படிப்பகம் அமைத்தல், உறுப்பினர் சேர்த்தல் முதலான ஆக்கப்பணிகள் தொடங்கியாக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கழகத்திற்குத் தேர்தல் திட்டம் இல்லை என்போர்க்குப் பதில்கூறும் வகையில், கழகம் 1962லேயே தன் திட்டத்தை மக்கள்முன் வைத்திருக்கிறது எனவும், அவைகள் செயல்படுத்தப்பட்டாலே நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்குமெனவும் தெளிவாக விளக்கினார். சொல்வன்மைமிக்க கழகத்துக்குச் செயல் வன்மையும் கிடைத்துவிடுமானால், தமிழகத்தின் துயர் களையப்பட முடியும் என்றும் விளக்கினார் அவர்.

நாவலரையடுத்து வரவேற்புக் குழுத் தலைவர் **சாம்பசிவம்,** மாநாட்டின்வெற்றிக்கும் சிறப்பிற்கும் அயராதுழைத்த அத்துணைப் பேருக்கும், தொண்டர்படைத் தலைவர் மாரியப்பன் மற்றும்




..எல்லாம் வெளிநாட்டு உதவியிலேயே நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது மானங்கெட்ட செயல். நமக்கும் மானம் மரியாதை ஏற்படவேண்டும்.

—திருச்சி மாநாட்டில் காமராசர்

துணைத்தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், பெண் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் மற்றவர்க்கும் சிறப்புற நன்றிகூறி முடித்தபின் அறிஞர் அண்ணா அவர்கள், குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க அமைதிக்கிடையே உரை நிகழ்த்தினார்.

**அறிஞர் அண்ணா** அவர்கள் பேசியதாவது:

மழை, காற்று போன்ற இயற்கை நெருக்கடிகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு, சமாளித்து இருக்கிறோம். காங்கிரசின் எதிர்ப்பைச் சமாளிப்பது நமக்குப் பெரிதல்ல.

இத்தகைய மாநாடுகளுக்குத் தலைவர்கள் எல்லாம் விளக்கம்தர வருகிறார்கள். நீங்கள் எல்லாம் விளக்கம்பெற வருகிறீர்கள். ஆனால் நான், இங்கே நிகழ்கின்ற நிகழ்ச்சிகளையும், அதனைக் கண்டு, கேட்ட உங்கள் உணர்வையும் படம் பிடித்துச் செல்ல வந்திருக்கிறேன்.

காந்தி, நேரு போன்றவர்களால் கட்டிக்காத்து வளர்த்துக் கொடுக்கப்பட்டதுதான் காங்கிரஸ். ஆனால் கழகமோ, ஒரு புதிய கட்சி. சாமான்யர்கள் கட்சி. இந்த வேறுபாட்டைப் புரிந்துகொண்டவர்களுக்குத்தான் அரசியலும் புரியமுடியும்.

பட்டம், பதவி, பெர்மிட், லைசென்ஸ் இவைகளுக்காகவே பணக்காரர்கள் காங்கிரசில் சேர வருகிறார்கள். பழுத்த பழம் புசிக்க வரும் மனித ஒளவால்கள் நிரம்பியதுதான் காங்கிரஸ் கட்சி.

காங்கிரசுக்கு உள்ளே பலப் பரிட்சை நடந்துகொண்டிருக்கிறது. காங்கிரசில் சேரவரும் பணக்காரர்களும் முதலாளிகளும் ஏமாளிகளோ முட்டாள்களோ அல்லர். ஏழை பணக்காரர்க்கிடையே ஒரு இணைப்புப் பாலம் போல் இருக்கிறார் காமராஜர் என்று பணக்காரர்கள் நினைக்கின்றனர். இந்தப் பரிட்சையில் காமராசர் தோற்பது உறுதி! பணக்காரர்கள் வெற்றியடைவார்கள்.

பண்பும், உண்மையும் வெற்றி பெற்றிருக்குமானால், இன்றைக்குக் காங்கிரசிலிருந்து பெரிய பல தலைவர்கள் வெளியேறி இருக்க மாட்டார்கள்.

நாம் வெற்றி பெறுவோம், வெற்றி உறுதி என்ற நம்பிக்கைக்குக் காரணமே நம்மிடையே பயமில்லை; சந்தேகமில்லை, அப்படி ஐயப்பாட்டுக்குரியவர்கள் யாரும் இப்போது இங்கே இல்லை. எந்த நேரத்தில் யார் எப்படி ஆவார்களோ என்ற சந்தேகப் பேர்வழிகள் அங்கே சூழ்ந்திருக்கிறார்கள்.

கடந்த 19 ஆண்டுக் காலத்தில், இந்த நாட்டில் நல்லாட்சி நிலவி இருந்தால், கழகம் வளர்ந்திருக்குமா? தேர்தலுக்குத் தேர்தல் கழகம் அதிக வாக்குகளைப் பெற்று வளர்ந்து வருகிறது. காங்கிரஸ் தேய்வுபெற்று வருகிறது!

நாம் 1962-ல் தேர்தலின்போது கூறியபோது கேலி செய்த ஜோதியம்மாள் அவர்கள், தேர்தலுக்குப் பின், ரூபாய்க்கு 2-படி அரிசி கிடைக்கச் செய்வோம் என்றார் என்றால் என்ன பொருள்?

அன்றைக்கும், இன்றைக்கும் உள்ள அரிசியின் விலை ஒன்றை மட்டும் கணக்கிட்டுப்பார்த்துப் புரிந்து கொண்டவர்களாகப் பொதுமக்கள் இருக்கும்போது, கழகத்துக்கு வாக்குகள் குறையவா செய்யும்? இந்நிலையில் காங்கிரஸ் வளருமா?

உடனடியாக, வருகிற 6-மாத காலத்திற்குள் கழகத் தோழர்கள் கழக இதழ்களின் விற்பனை பெருகும் ஒத்துழைப்பைப் பெருக்கிக் கொண்டாக வேண்டும். பிற இதழ்களில் உண்மைச் செய்திகள் மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் இருக்கும் நிலையில், கழக ஏடுகளின் வளர்ச்சிப் பெருக்கம்தான் நம் வெற்றியின் பெருக்கமாக இருக்கும் என்ற நம்பிக்கையில், நம்நாடு, முரசொலி, காஞ்சி போன்ற இதழ்களின் வளர்ச்சியில் தோழர்கள் அக்கறை காட்டவேண்டும்.

எல்லோருக்கும் 'சோறு' என்று காமராசர் கூறுகிறபோது மக்கள் நம்புகிறார்கள். எல்லோருக்கும் வீடு என்கிறபோதும் நம்புகிறார்கள். ஏன்?

**எல்லோருக்கும் 'சோறு' கிடைக்காதநிலையும், எல்லோருக்கும் 'வீடு' இல்லாத நிலையும் இங்கே இருக்கிறதால்!**

**அரசாங்கம் எதைச் செய்தாலும், அது அமைச்சர்கள் செய்வதாக நம்புகிற நாடு இது.**

**கருத்துக் குருடர்கள்!**

நாம் மிகவும் அனுபவிக்கக் கூடிய தலை சிறந்த ஒன்று, புரியாத மறைபொருளே. அதுதான் உண்மையான கலைக்கும் விஞ்ஞானத்துக்கும் கருப்பொருள், இத்தகைய அனுபவமே பெற்றிராத ஒருவன்-- பெரும் வியப்புடன் மலைத்து நின்று மதிப்புடன் நோக்காத ஒருவன்--அவன் இருந்தும் இறந்தவனே ஆவான், அவன் கண்ணிருந்தும் குருடனே ஆவான்.

—ஐன்ஸ்டீன்.

**ஆகவே, இங்கே அரசியல் நடத்துவது என்பது அவ்வளவு எளிதல்ல.**

இங்கிலாந்து நாட்டுப் பார்லிமெண்டில் பொருளாதார மேதையும் அமைச்சருமான டால்டன் என்பவரைப் பார்த்து, உயர்ந்த ஆடைகள் அணிந்து வருவதைப் பற்றி ஐயப்படுகிறேன்; இது உங்கள் பொருளாதார நிலைக்கு உட்பட்டதல்லவே! என, எதிர்க் கட்சி உறுப்பினர் ஒருவர் கேட்டவுடனேயே, உண்மையை ஒப்புக்கொண்டு, துணிக்கடைக்காரர் ஒருவர் கொடுத்ததாகக் கூறி-தவறுக்கு வருந்தி, பதவியையும் ராஜினாமா செய்திருக்கிறார். ஆனால் இங்கே?

மக்கள் தெளிவற்றவர்களாக இருப்பதாகக் காங்கிரஸ் நம்புகிறது;

மக்கள் தெளிவு பெற்று வருகிறார்கள் என்று கழகம் நம்புகிறது.

—எது உண்மையென்ற கணக்குக்கு 1967-லேதான் விளக்கம் தெரிந்தாக வேண்டும்.

1967-லே மக்கள், நாங்கள் அறிவுடையவர்கள் என்று காட்டித் தீரவேண்டும்."

இருநாள் நிகழ்ச்சிகளின்போதும், **சிவகெங்கை சேதுராசன்** குழுவினரது இசை நிகழ்ச்சியும், குமாரி விஜயாவின் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றதுடன், எஸ். எஸ். ஆர். நாடகக் குழுவின் மணிமகுடம், தென்பாண்டிவீரன் ஆகிய நாடகங்களும் முறையே நடைபெற்றன.

—**சீயேயெம்.**

O

# ஏனிந்த ஆணவம்? எதற்கிந்த கொடுமொழி?

6-ம் பக்கத் தொடர்ச்சி

**என்னென்ன விதமான வழக்குகளைத் தொடுத்தனர்;**

**எத்தனை தடிஅடி! சிறைவாசம்!**

சதிச் செயல்களுக்குத்தான் குறைவா?

தூத்துக்குடி சாமியிலிருந்து வண்ணைப் பாண்டியன் வரையில் கொலை செய்யப்பட வில்லையா!

ஒடித்த கொடிமரங்கள் கொஞ்சமா! கொளுத்திய கொடிகள் கொஞ்சமா!

இட்டுக் கட்டியதும் இருட்டடிப்பு நடத்தியதும் திறமையுடன் அல்லவா!

கழகத் தலைவர்களை ஏசிப் பேசிட வசை மொழிகள் சாதாரணமாகவா! தனித் தரமுள்ள நாராச நடையிலல்லவா!!

பிறப்பு வளர்ப்பு, குடும்பம் கொடிவழி என்ற எதையாவது விட்டார்களா!

மண்ணாசைக்காரன், பெண்ணாசைப் பேயன் பொன்னாசை பிடித்தோன் என்றெல்லாம் கழகத்தின் முன்னணியினரை ஏசியது கொஞ்சமா!

கூத்தாடிகள்!—என்றல்லவா இகழ்ந்தனர்–இன்று 'கலைஞர்களை' நாங்களும் காட்டுகிறோம் என்று பேசிடும் இந்த குணாளர்கள்!

எத்தனை விதவிதமான எதிர்ப்பு மாநாடுகள், ஒழிப்பு மாநாடுகளை நடத்திக் காட்டினர்.

உள்ளூர் சரக்கு போதாது என்று வெளியூர் சரக்குகளை வேண மட்டும் வரவழைத்து கூவிக் கூவி விற்றார்களல்லவா!

கருப்புக் கொடியா! காட்டுபவன் கரத்தை ஒடி!! என்ற அகிம்சைப் பேச்சு வழிந்ததே!

எதைச் செய்யாமல் விட்டார்கள்!

எல்லாம் செய்து பார்த்து, கழகம் வளருவதைத் தடுக்க முடியவில்லை.

வெட்டவெளியில் இருந்த கழகம் சட்ட சபைக்கே வந்துவிட்டது!

சட்டசபையிலும், கழகம் அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகி விட்டது!

இந்த வளர்ச்சியைத் தடுத்திட முடியாத இதே வல்லமைசாலிகள்தான், இப்போது 67000 அடி ஆழமான குழி தோண்டப் போகிறார்களாம்!

நாட்டிலே சில ஆயிரம் புதுப் பணக்காரர்களை உண்டாக்கி வைத்துக் கொண்டிருப்பதால், கேட்ட பணம் கிடைக்கிறது என்ற ஒரு தைரியம் தவிர, மக்களின் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது எமது ஆட்சியின் திறமையால், ஆகவே மக்களின் பேராதரவு எமக்கே உண்டு என்று பேசிடும் தைரியமா இன்று அவர்களுக்கு இருக்கிறது?

மக்கள் மனம் மகிழ்ந்திடும்படியான ஆட்சி நடத்தியிருந்தால் எதிர்க் கட்சிகள் இந்த அளவு வளர்ந்திருக்க முடியுமா!

குழி தோண்டுகிறார்கள் என்றே வைத்துக் கொள்வோம் தம்பி! ஆழமான குழி! அதைப் பார்த்து மக்கள் கேட்கமாட்டார்களா?

நாடாளும் நல்லவர்களே! எதற்காக இத்தனை ஆழமான குழி தோண்டுகிறீர்கள்?

இதுவா? இது, தி. மு. கழகத்தைப் போட்டுப் புதைக்க!

இவ்வளவு ஆழமான குழி தேவைப்படுகிறது என்றால், தி. மு. கழகம் பெரிய கட்சி என்று தெரிகிறதே, அப்படியா? அப்படியானால், எப்படி அது இந்த அளவுக்கு வளர்ந்துவிட்டது?

எப்படியோ வளர்ந்துவிட்டது! இப்போது இந்தக் குழியில் போட்டுப் புதைத்துவிடப் போகிறோம்.

ஏன்? தி. மு. கழகம் என்ன கெடுதல் செய்தது? குழியில் போட்டுப் புதைத்திட வேண்டிய விதமான கெடுதி யாருக்கு என்ன செய்தது?

உனக்குத் தெரியாது! இது மிக மிக கெட்ட கட்சி! ஆமாம் பொல்லாத கட்சி! நாட்டையே நாசமாக்கும் கட்சி!

அந்த விவரம்தான் கேட்கிறோம், என்ன செய்துவிட்டது கழகம்? ஊர் மக்கள் சொத்தைச் சுருட்டிக் கொண்டதா? ஆயிரமாயிரம் சம்பளம் வாங்கிக் கொண்டு உல்லாச வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்ததா? கள்ளமார்க்கட்காரனுடன் குலவிற்றா? கொள்ளை இலாபக்காரனிடம் குலவிக் கிடந்ததா? ஊழல் ஊதாரித்தனம் நடத்திற்றா?—என்ன செய்தது சொல்லுங்கள், கேட்போம்...?

இப்படி உரையாடல் இருந்திடின், குழி தோண்டக் கிளம்பிடும் குணாளர்கள் என்ன பதில் கூறுவர்.

போ! போ! உனக்கொன்றும்தெரியாது.
நீ மேற்கொண்டு ஏதாவது பேசினால் உன்னையும் இந்தக் குழியில் போட்டுப் புதைத்து விடுவோம் என்றுதான் பேசுவர்.

ஆனால் பொதுமக்கள் என்ன பேசிக்கொள்வார்கள்?

திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி இந்தக் காங்கிரஸ்காரர்களுக்குக் கிலியை மூட்டிவிட்டு விட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்தான் விழிப்புடன் இருந்துகொண்டு, காங்கிரசாட்சி ஆகாத சட்டம் கொண்டு வந்தால் எதிர்க்கிறது; அநியாய வரி போட்டால் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசாட்சியிலே நெளியும் ஊழலை ஊதாரித்தனத்தைக் கண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், மக்களிடம் வாங்கிடும் வரித்தொகை எவ்வளவு, மக்களுக்குச் செய்திடும் வசதி எந்த அளவு, காட்டு கணக்கு என்று துணிந்து காங்கிரசைக் கேட்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், எத்தனையோ பேர் நமக்கென்ன என்றும், நம்மால் ஆகுமா என்றும் வாய் மூடிக்கிடந்திடுவதைக் கண்ட பிறகும், நமக்கு என்ன நேரிட்டாலும்சரி, நம்முடைய உள்ளத்துக்குச் சரியென்று பட்டதைச் சொல்லியாகவேண்டும் என்ற தூய்மையுடன் பணியாற்றுகிறது.

# ஆதிக்கம் நிலைக்க ஆர்ப்பரித்துப் பயனில்லை

திராவிட முன்னேற்றக் கழகம், மொழிக்காக, கலை வளத்துக்காக, தொழில் முன்னேற்றத்துக்காக, அந்த முன்னேற்றம் முதலாளிகளிடம் சிக்கிவிடாமல் சமுதாயத்துக்குப் பரவுவதற்காகப் பாடுபடுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், முதலாளிகளுக்கும் காங்கிரசாட்சிக்கும் ஏற்பட்டுவிட்டுள்ள எழுதாத ஒப்பந்தத்தை எடுத்துக் காட்டுகிறது.

சுட்டுகளை உடைக்கிறது! கொடுமைகளை எதிர்க்கிறது! ஆட்சியில் உள்ள அக்ரமங்களை அம்பலப் படுத்துகிறது.

அந்த எரிச்சல், காங்கிரசுக்கு! நமது ஆதிக்கத்துக்குக் கழகம் உலை வைக்கிறதே என்ற எரிச்சல்.

பட்டம் உண்டு, பதவி உண்டு, பர்மிட் உண்டு, லைசென்சு உண்டு; பத்திரிகைகளில் நிறைய விளம்பரம் உண்டு, வருக! பெருக! என்று அழைத்ததும் ஓடோடி வந்து நம்மோடு கூடிக்கொண்டார்கள் பலப் பலர், இந்த கழகத்துக்காரர்கள் மட்டும், பசப்பு கண்டு மயங்கமாட்டோம், பாதை தவறமாட்டோம் என்று இருக்கிறார்களே, பொதுமக்களிடம் தோழமைத் தொடர்புடன் இருந்து வருகிறார்களே, இவர்களைத் தொலைத்தாலொழிய நமது ஆதிக்கம் நிலைக்காது, நீடிக்காது என்ற உணர்ச்சி.

இதன் காரணமாகத்தான், காங்கிரசாட்சியினர் கழகத்தைப் புதைக்க வேண்டும், அதற்காக ஆழக் குழி தோண்டவேண்டும் என்று எண்ணுகிறார்கள்—என்று பேசிக்கொள்ள மாட்டார்களா!

இது அக்ரமம்! நமக்காக, நாட்டுக்காகப் பாடுபடும் கழகத்தை நாம் காத்திட வேண்டும் துணை நிற்கவேண்டும் என்று பொதுமக்கள் எண்ணிடத்தான் செய்வார்கள்.

மக்களுக்கு வயிறாரச் சோறு கிடைக்க வழி செய்திடுக!—என்று கேட்டிடும் கழகத்தை, ஏழை மக்களே! எலி தின்று உயிர் பிழைத்துக் கொள்க என்று பேசிடும் காங்கிரஸ், ஒழித்திட முனைவதா! அதை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா! நமக்காக வாதாடும் கழகத்தை, நம்மை வதைத்து வரும் வன்கணாளர் குழி தோண்டிப்புதைப்போம் என்று கிளம்புவதா, நாம் வாளாயிருப்பதா—என்று பொது மக்கள் எப்படி எண்ணிடாமலிருந்திட முடியும்.

காங்கிரசாட்சியினர் இப்போதுபோல இறுமாந்து பேசிய ஒவ்வொரு கட்டத்திலும், அவர்களின் முயற்சி பலன்தராமல், கழகம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து வந்ததன் காரணமே இதுதான்—பொது மக்களின் நல்லாதரவு!!

தம்பி! அவர்கள் குழி தோண்டுகிற வேலையிலே இருக்கட்டும்—ஆழமான குழி!!

நாம், மக்களிடம் சென்று உண்மை நிலைமையை எடுத்துக் கூறிடும் பணியிலேயே நம்மை முழுக்க முழுக்க ஒப்படைத்துவிட வேண்டும்.

தங்கள் ஆதிக்கத்துக்கு உலைவைக்கிறதே கழகம் என்ற எரிச்சலில், காங்கிரசார் ஆத்திரம் கொள்ளத்தான் செய்வார்கள்; கழி சுழற்றுவார்கள், விழி பெயர்த்திடுவேன் என்பார்கள், குழி தோண்டிப் புதைப்பேன் என்பார்கள்.

பாவிப்பயல்! இன்னும் தூங்கவில்லையே என்று நள்ளிரவு கன்னம் வைத்திட வருபவன், வீட்டுக் குடையானைச் சபித்திடத்தான் செய்வான்.

சனியன் இன்னும் வெளியே போய்த் தொலைக்க வில்லையே என்று கள்ளக் காதலனுக்காக ஏங்கிடும் நாயகி கை பிசைந்து கொள்கிறாள் என்று கதையில் எழுதுகிறார்கள் அல்லவா!

அதுபோல இவர்கள், ஓயமாட்டேன் என்கிறார்களே! விடாது எதிர்த்து வருகிறார்களே! படிப்படியாக முன்னேறுகிறார்களே! வளர்ச்சி இருந்தபடி இருக்கிறதே!—என்று எண்ணி மனம் புழுங்குகிறார்கள், அவர்களுக்குத் தோன்றத்தான் செய்யும், கழகத்தைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்று.

அவர்களின் ஆத்திரப் பேச்சு, நமது பணி ஆற்றலுடன் நடந்து வருகிறது என்பதற்குச் சான்றளிக்கிறது!

நாம் ஓயாமல் உழைத்து வருகிறோம் என்பதுடன், மேலும் உழைத்திட உறுதியும் உற்சாகமும் இருக்கிறது என்பதை நாம் உணருவதற்கு அவர்களின் உருட்டல் மிரட்டல் பேச்சு நமக்குப் பயன்படுகிறது.

அவர்கள் குழி தோண்டியபடி இருக்கட்டும், நாம் மக்களுக்கு நல்வழி எது என்பதனை எடுத்துக் காட்டியபடி இருப்போம்.

அவர்கள் தங்கள் ஆதிக்கம் பறிபோகக் கூடாது என்று பதறுகிறார்கள், அதனால் அவர்கள் பேச்சிலே ஆத்திரம் கொந்தளிக்கிறது.

நாம் மக்களுக்கு ஒரு நல்லாட்சி அமையவேண்டும் என்பதற்காகப்பாடுபடும் பணியினை மேற்கொண்டிருக்கிறோம். நமது பணி பயனற்றது, நமது முறை தெளிவற்றது, நமது ஆற்றல் தரமற்றது என்றால் நம்மைப் பற்றிய நினைப்பே ஆளவந்தார்களுக்கு எழாது.

இன்றோ நம்மைப் பற்றிய நினைப்பன்றி வேறு எந்த நினைப்பும் அவர்களுக்கு எழுவதில்லை.

எங்கு சென்றாலும், எதைச் செய்து கொண்டிருந்தாலும், அவர்களின் மனதிலே நம்மைப் பற்றியே நினைப்பு!

இதைச் செய்தால் என்ன சொல்லுவார்களோ, அதைச் செய்தால் என்ன செய்வார்களோ, என்ற அச்சம் அவர்களைப் பிடித்து வாட்டுகிறது.

அதனால்தான், சுற்றிலும் சீமான்கள் வீற்றிருக்க, இலட்சங்கள் காணிக்கையாகக் கிடைத்திருக்க, பத்திரிகைகள் புகழ்பாடி நின்றிருக்க, கொலுவிருக்கும் நிலையிலும் அவர்களுக்கு, 67000 அடி ஆழமுள்ள குழி தோண்டவேண்டும் என்ற 'அபாரமான' திட்டத்தின் மீது நாட்டம் செல்லுகிறது.

நம்மை ஒழிக்க அவர்கள் மேற்கொண்ட முன்னைய திட்டங்களைப் போலவே இந்தத் திட்டமும், பயனற்றதாகிப் போகும்.

முன்பு அவர்கள் நம்மை ஒழிக்கத் திட்டம் போட்டபோது இருந்ததைவிட இன்று அவர்கள்மீது மக்கள் கொண்டுள்ள கோபம் பன்மடங்கு வளர்ந்திருக்கிறது.

# குழி தோண்டப்போவது கோலேந்திகட்கே!

ஏதோ சோற்றுக்குக் குறைவில்லை—என்ற நிலையில் மக்கள் முன்பு இருந்தார்கள்.

இன்று, சோறு! சோறு! என்று ஏன் கதறுகிறீர்கள், கிடைத்ததை வயிற்றில் போட்டு நிரப்பிக்கொள்ளுங்கள் என்று ஆளவந்தார்கள் பேசிடக் கேட்கும் நிலையில் உள்ளனர்.

மக்கள் அடைந்திருக்கிற கோபம், கசப்பு, கொந்தளிப்பு ஒவ்வொரு நாளும் தெரிந்தபடி இருக்கிறதே, தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், கடை அடைப்புகள், வேலை நிறுத்தங்கள் என்பவை மூலம்.

சமூகத்தில் எந்தத் துறையினராவது மனக்கசப்பு இன்றி, குமுறல் இன்றி இருக்கின்றனரா?

கிளர்ச்சி என்றாலே அது வெறும் ஆலைத் தொழிலாளி செய்வது, நமக்கு அது ஒத்து வராது என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களெல்லாம் இன்று தத்தமது அமைப்புகள் மூலம், கிளர்ச்சி நடத்திடக் காண்கிறோமே.

சர்க்கார் அலுவலகப் பணியாளர்கள் சீறி எழுவதைக் காண்கிறோம்.

பாங்குகளில் ஊதியம் பெறுவோர் கிளர்ந்தெழுவதைப் பார்க்கிறோம்.

ஆறாத் துயரில் சிக்கியுள்ள ஆசிரியர்கள் 'ஆர்ப்பாட்ட அணிவகுப்பு' நடத்திடக் காண்கிறோம்.

யார் இந்த ஆட்சியிலே திருப்தியுடன் இருந்திட முடிகிறது.

நாடே எமது பக்கம்! என்று நாப்பறை ஒலித்துக் காட்டுகிறார்கள், ஆளவந்தார்கள்.

இல்லை! இல்லை!—என்ற முழக்கம் எழுப்புகின்றனர், ஒவ்வொரு கிளர்ச்சியின்போதும்.

துப்பாக்கி பேசுகிறது! பிணம் விழுகிறது! பீதி கொண்டு மக்கள் ஓடிடக்கூட மறுக்கிறார்கள்.

வீரன் வீழ்ந்தான்! வீரம் வீழ்ந்துபடாது! ஒருவன் மாண்டான்! மற்றவர் மாண்டிடாதிருக்குமட்டும் அறப்போர் நடந்திடும்!! — என்றல்லவா முழக்கம் எழுப்புகிறார்கள்.

போலீஸ் போதவில்லை! இராணுவம் வரவழைக்கப்படுகிறது! ஏன்? கொந்தளிப்பு அடங்க மறுக்கிறது.

> சாகவேண்டி நேரிட்டுவிடுமோ என்ற பயம்கூட இன்று மக்களிடம் வெகுவாகக் குறைந்து விட்டிருக்கிறது; குறைந்து கொண்டும் வருகிறது.

> **பலர் வாழச் சிலர் சாகலாம் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்ட தத்துவமாகிவிட்டது.**

> அந்தத் தத்துவம் நடைமுறைக்கே வந்துவிட்டதோ என்று சொல்லத்தக்க நிலைமைகள் உருவாகிக்கொண்டு வருகின்றன.

தம்பி! ஒன்று கூறுவர் காங்கிரசார்; கூறுகின்றனர்; இந்தக் கிளர்ச்சிகள் எதிர்க்கட்சிகள் வேண்டுமென்றே தூண்டிவிடுகின்றன—என்று.

எதிர்க் கட்சிகள் கிளர்ச்சிகளைத் தூண்டிவிடுகின்றன என்றே வாதத்துக்காக வைத்துக்கொள்வோம்; மக்கள் என்ன ஏமாளிகளா, அவர்கள் அறியார்களா; கிளர்ச்சியை ஒடுக்கத்தடியடி நடக்கும், துப்பாக்கியால் சுடுவார்கள் என்பதனை? தெரிந்தும் கிளர்ச்சியில் ஏன் ஈடுபடுகிறார்கள்?

> அவர்கள் மனதிலே கொந்தளிப்பு இருக்கிறது, ஆகவே கிளர்ச்சி செய்திடும் துணிவு தன்னாலே பிறக்கிறது.

எந்த எதிர்க்கட்சியும். தடியடிபட வருவீர்! துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாக வருவீர்! என்று மக்களை அழைத்துவர முடியாது. ஆனால் நடைபெறும் கிளர்ச்சிகள், ஆட்சியின் அலங்கோலத்தின் விளைவு என்பதை உணராதவர்கள் எதிர்க்கட்சிகள்மீது பழிபோடுகின்றனர்.

இதனை முட்டாள்தனம் என்று கண்டித்திருக்கிறார் ஒரு பேரறிவாளர்; இன்றைய ஆட்சியாளர்களும் போற்றித்தீரவேண்டிய பேரறிவாளர்.

> **இலட்சியங்களுக்காகவும் பொருளாதார நிலை காரணமாகவும், புரட்சிகள் ஏற்படுகின்றன. அதிகாரத்தில் உள்ள முட்டாள்தனமானவர்கள், தங்கள் எண்ணத்தோடு ஒட்டிவராத எதனையும் காண இயலாத கருத்துக் குருடர்கள் இந்தப் புரட்சிகளெல்லாம் கிளர்ச்சிகளால் விளைகின்றன என்று எண்ணிக்கொள்கிறார்கள். உள்ள நிலைமையில் திருப்தி ஏற்படாமல், மாறுதலை விரும்பி அதற்கான வேலை செய்பவர்களே கிளர்ச்சிக்காரர்கள்! ஆனால் ஆயிரம் ஆயிரம் மக்கள் ஒரு கிளர்ச்சிக்காரன் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்துவிட மாட்டார்கள். பெரும்பாலான மக்கள் பாதுகாப்பாக வாழ விரும்புபவர்கள்; இருப்பதை இழந்துவிட விரும்பமாட்டார்கள். ஆனால் பொருளாதார நிலைமை கெட்டு, அன்றாட வாழ்க்கையில் நலிவு வளர்ந்து, வாழ்வே ஒரு சுமை என்று ஆகிப்போய்விடுமானால், வலிவற்றவர்களும், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டுவிடுகிறார்கள்.**

இன்று நாட்டு மக்களில் மிகப் பெரும்பாலானவர்சள் இந்த நிலைமைக்குத் துரத்தப் படுகிறார்கள்! நடப்பது நடக்கட்டும்!—என்று துணிந்துவிடும் நிலைமைக்கு. இதை உணராமல், மக்களைச் சிலர் தூண்டிவிடுகிறார்கள் என்று பேசி வருகின்றார்கள் ஆளவந்தார்கள்.

> இவர்கள் கருத்துக் குருடர்கள், அறிவற்றவர்கள் என்று கண்டித்திருக்கிறார்.

யார்? **பண்டித ஜவஹர்லால்**நேருவேதான். அவர் எப்போதோ உணர்ச்சி வயப்பட்டு பேசிவிட்ட ஆவேசப் பேச்சு அல்ல; நாடு அறியட்டும், உலகம் உணரட்டும்; வழி வழி வந்திடுவோர் பாடம் பெறட்டும் என்ற நோக்கத்துடன் உலக வரலாறு எனும் தமது நூலிலே எழுதி இருக்கிறார்.

நேருவின் வாரிசுகள் என்று கூறிக் கொள்பவர்களுக்கு, தம்பி! நான் இதனை நினைவுபடுத்தவேண்டி வருகிறது! என்ன செய்வது!!

> Ideas and economic conditions make revolutions. Foolish people in authority blind to everything that does not fit in with their ideas imagine that revolutions

are caused by agitations. Agitators are people who are dis-contended with existing conditions and desire a change and work for it. But tens and hundreds of thousands of people do not more to action merely at the bidding of an agitator. Most people disire security above everything else, they do not want to risk losing what they have got. But when economic conditions are such that their day to day suffering grows and life becomes almost an intolerable burden then even the weak are prepared to take the risk.

நேருவின் இந்த மணிமொழியை உணர இயலாமல், கிளர்ச்சிகள் மூண்டுவிடுகின்றன — மூட்டிவிடப்படுவன அல்ல-என்பதை அறியாமல், சுட்டுத் தள்ளினால் மக்கள் சுருண்டு பிணமாகக் கீழே விழுந்தால், சமுதாயம் அடங்கிப் போய்விடும் என்று கருதிக்கொண்டு, சுட்டுத் தள்ளுகிறார்கள்.

ஆமாம்! ஐம்பது பேர் சுட்டுத் தள்ளப் பட்டார்கள்!!

என்று அவருடைய ஆயுட் காலத்திலேயே இதனை விடப் பெரிய சாதனை இல்லை என்று கருதுபவர்போலப் பேசினாரல்லவா பக்தவத்சலனார்—"பாறைபோல நின்றவர்"—அந்த நிலை எதைக் காட்டுகிறது?

சுட்டுத்தள்ளி கிளர்ச்சியை ஒடுக்குவோம் என்று இவர்கள் கொண்டுள்ள உறுதியை.

ஆகவேதான் தம்பி! 67000 அடி ஆழமுள்ள குழி தேவைப்படுகிறது.

கழகத்தைப் போட்டுப் புதைக்க என்று பேசினார்களே தவிர, அத்தனை ஆழமான குழி தோண்டப்பட வேண்டும் என்று அவர்கள் எண்ணுவதற்குக் காரணம், அவர்கள் குழியில் போட்டுப் புதைத்துவிட விரும்புபவை, கழகம் மட்டுமல்ல, வேறுபல உள!

காந்தியம்
ஜனநாயகம்
அறநெறி
மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகள்.

கிளர்ச்சியை ஒடுக்க வீழ்த்தப்பட்டவர் பிணம்! இவ்வளவும் இருப்பதால்தான் அவ்வளவு ஆழமான குழி தோண்டவேண்டும் என்று தோன்றுகிறது போலும்.

**பிறரை வீழ்த்தக் குழிபறிப்போன், வெட்டிய குழியில் தானே வீழ்வான்**

என்று எங்கோ படித்ததாக நினைவு.

தம்பி! அவர்கள் குழி வெட்டிக்கொண்டே இருக்கட்டும், நீயும் நானும் அதிலே தள்ளப்படுவதாக இருந்தாலும், அந்தக் கடைசி நிமிடம் வரையில் மக்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லிக்கொண்டிருப்போம். உண்மைக்கு வெற்றி கிடைக்கிறதா இல்லையா என்பதைத்தான் பார்த்துவிடுவோமே.

**அண்ணன்,**

அண்ணாதுரை

3-ம் பக்கத் தொடர்ச்சி

நாம் சொன்னால் மக்கள் கேட்டுக்கொள்ள வேண்டியவர்கள்—கேட்டுக் கொள்வார்கள் என்பது தானே!

கேட்டுக்கொள்ள வேண்டிய நிலையில்தான் மக்கள் அன்றிருந்தார்கள். நானே என்ற நம்பிக்கையில், அடி வயிற்றையும் கொஞ்சம் தடவிக் கொடுத்துக் கொண்டார்கள்.

*19 ஆண்டுகளுக்குப்பின் இன்றைய நிலை என்ன? எலிக்கறி சாப்பிடுங்கள்: பூனைக்கறி சத்துள்ளது; ஒட்டகப் பால் உயரிய ஊட்டம் என்ற அறிவுரை தரும் அளவு முன்னேற்றமல்லவா! எந்த எண்ணத்தில் இப்படிப்பட்ட அறிவுரைகள் வழங்கப் படுகின்றன?*

**ஆட்டுமந்தை யாமென்றுலகை அரசர் எண்ணிவிட்டார்!**

என்ற பாரதியாருடைய கவிதையடியை ஆட்சியினர் மெய்ப்பிக்கின்றனர் என்பதைத்தவிர நிலைமை என்ன? பாரதியார் பாடியது வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களைப்பற்றி. இன்று இது காங்கிரஸ் ஆளவந்தார்க்கும் பொருந்துகிற நிலைமையென்றால்—பொருள்?

மக்களிடம் எதுவும் பேசமுடியாது; பேசக்கூடாது என்பதுவா? பின்னும் பேசுகிறார்கள் என்றால், ஆளவந்தாரின் நம்பிக்கைதான் என்ன?

நாம் இதன் தொடக்கத்தில் குறிப்பிட்டது போல், மக்கள் அறியாமையில் கிடக்கிறார்கள் என்பதுதானே!

ஒவ்வொரு திட்டத்தின் தொடக்க காலத்திலும், அந்தந்த திட்டங்களின் சாதனைகளைப்பற்றித்தெரிவிக்கப்பட்ட நம்பிக்கைகளும், அளிக்கப்பட்ட உத்திரவாதங்களும், இறுதிக் கட்டத்தில் எதனைத் தெளிவுப்படுத்திக் காட்டுகின்றன?

மக்கள் அறியாமையில் கிடக்கிறார்கள்; காங்கிரஸ் வெற்றி பெற்றுவிட முடியும் என்ற ஆணவமிக்க கருத்து, காங்கிரசுக்கு வலுப்பட்டுக் கொண்டே வருகிறது என்பதையல்லவா!

ஆகவேதான், இந்த நாட்டு மக்கள் தங்கள் அறிவுத் தெளிவைக் காட்டிவிட வேண்டிய கட்டத்தை 1967 பொதுத் தேர்தல் உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது என்று கழகம் கூறுகிறது.

1967ல் வெற்றி பெறப்போவது அறியாமையா? அறிவுடைமையா என்பதைக் கணிக்கவேண்டிய பொறுப்பு நாட்டு மக்களுடையது என்பதை வலியுறுத்திக் கூறுவதுடன், அறியாமைதான் என்பதற்கு அனுமதி வழங்கிவிட்டால்-

*இருட்டில் நாடு இருக்குதடா—இதில் எத்தனை இழிவுகள் நடக்குதடா!*

என்று தெந்தினம் பாடிக் கிளம்பிவிடவும் மக்கள் தயாராக இருக்கவேண்டும் என்று எச்சரித்து வைக்கிறோம்.

❋

முகப்பில்:- கள்ளக்குறிச்சி மாநாட்டின் மேடைத் தோற்றம்

சென்னை காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் கி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.